Follow us

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 540 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை (10.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 09, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50




## உஷ்

பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த விடயம் ராஜபக்ஷ குடும்பத்திற்குள் புதிய சண்டைகளை உருவாக்கியுள்ளதாம். ஜனாதிபதியின் செயற்பாடுகள், பெசிலின் நடவடிக்கைகள் காரணமாக நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தே இந்த சச்சரவு ஏற்பட்டுள்ளதாம்.

இதன் விளைவாகவே ராஜபக்ஷ அணிக்குள் புதிய அரசியல் கட்சியொன்று விரைவில் அறிமுகமாகவுள்ளதாக சொல்லப்படுகிறது.

## கமெண்ட் கந்தர்..



தகுதியான ஒருவரை நியமிக்க இடமளித்துதான் எம்.பி. பதவிய இராஜினாமா செய்ததா பெசில் சொல்லுறார்... அப்படியெண்டா தான் தகுதியான ஆள் இல்லையெண்டு சொல்லுறாரோ..

# மக்களின் தேவை சிஸ்டம் சேஞ்ச்!

## எம்.பி. பதவியை துறந்த பெசில் தெரிவிப்பு

### அரசியலை தொடரவுள்ளதாகவும் கருத்து

•யோ.தர்மராஜ்

''நிதியமைச்சை பொறுப்பேற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்புக்கமையவே நான் நாடாளுமன்றம் வந்தேன்.

ஆனால், தற்போது நான் நாடாளுமன்றத்துக்கு உரித்துடையவனல்ல என்றே நினைப்பதால், தேசிய பட்டியல் உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகிறேன்.

மீண்டும் அரச நிர்வாகத்துக்குள் வரவும் மாட்டேன். அரசியலிலிருந்து விலகவும் மாட்டேன்'' என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (09) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தன்னுடைய பதவி விலகல் குறித்து அறிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

02 பக்கம்



படப்பிடிப்பு : கிரிஷான் காரியவசம்

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு நீதிமன்றம் தடையுத்தரவு

நாட்டில் 14 நாட்களுக்கு எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கை அல்லது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதையும், அதன்மூலம் மக்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்குவதில் பாதிப்பை ஏற்படுத்துவதையும் தடைசெய்யும் உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகம பிறப்பித்தார்.

இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இந்துவர மற்றும் சங்கத்தின் பொதுச் செயலாளர் தம்மிக்க விமலரத்ன ஆகியோருக்கு எதிராகவே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

# முகக்கவசம் இனி கட்டாயம் இல்லை



முகக்கவசம் அணிவது இன்று முதல் கட்டாயம் இல்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொவிட் பெருந்தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில், முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது முகக்கவசம் அணிவது கட்டாயம் கிடையாது என சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

# 'கப்புட்டா' விவகாரத்தால் ஆங்கிலத்தில் பேசாத பெசில்

காகத்தை ஆங்கிலத்தில் 'கப்புட்டா' என விளித்து சர்வதேச அளவில் ஹிட்டான பெசில் ராஜபக்ஷ, கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஆங்கில மொழியில் கருத்து வெளியிட மறுத்தார்.

தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வது தொடர்பில் விளக்கமளிப்பதற்காக பெசில் ராஜபக்ஷ ஊடக சந்திப்பை மொட்டுக் கட்சி தலைமையகத்தில் ஏற்பாடு செய்திருந்தார். இதில் பங்கேற்ற ஊடகர் ஒருவர், பெசில் ராஜபக்ஷவிடம் ஆங்கில மொழியில் கேள்வி கேட்டார்.

இதற்கு சிறிதுநேரம் ஆங்கிலத்தில் பதிலளித்த பெசில் ஒரு கட்டத்தில் தடுமாறினார்.

சுதாகரித்துக்கொண்ட அவர், "ஏற்கனவே, 'கப்புட்டா' சர்ச்சையில் சிக்கியுள்ளேன். தெரிந்த மொழியிலேயே கதைக்கின்றேன்"

02 பக்கம்

# நாளைக்கே தேர்தலொன்றை சந்திக்க நாங்கள் தயார்

## பெசில் சவடால் பேச்சு

•யோ.தர்மராஜ்

இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷவை இரு தடவைகளும், கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு தடவையுமென ராஜபக்ஷக்களை இந்நாட்டு மக்கள் ஆட்சியதிகாரத்துக்கு தெரிவுசெய்துள்ளனர்.

எனவே, நாளை என்றாலும் தேர்தலொன்றை எதிர்நோக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (09) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தன்னுடைய பதவி விலகல் குறித்து அறிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

# 21ஆவது திருத்தத்தை எதிர்க்கும் காரணத்தை விளக்கினார் பெசில்

•யோ.தர்மராஜ்

நாட்டிலுள்ள 69 இலட்சம் மக்களின் ஆதரவைப்பெற்ற ஒருவரின் அதிகாரத்தை 2 இலட்சம் வாக்குகளை பெற்ற ஒருவருக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதால், 21ஆவது திருத்தத்திற்கு நான் எதிர்ப்பை தெரிவிக்கிறேன் - என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

21ஆவது திருத்தம் யாருடைய தென்பது தெரியவில்லை. ஒருசில ஏற்பாடுகளுக்கு உரிமையாளர்கள் இருந்தாலும், சில ஏற்பாடுகளுக்கு எவ்வித உரிமையாளர்களும் இல்லை. எனவே, எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு நான் இணங்க முடியாது என்பதாலேயே பதவி விலகுவதற்கு தீர்மானித்தேன் எனவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (09)...

02 பக்கம்

# துறைமுகங்கள் மீதான சர்வதேச நம்பிக்கையை உறுதிப்படுத்த ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு

- துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களை ஏலம் விடும் முறையில் மாற்றம்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலக்காகக்கொண்டு பணியாளர் பயிற்சிக்கு நடவடிக்கை
- ரஷ்ய விமான நிறுவனத்துடனான பேச்சுவார்த்தை வெற்றி



02 பக்கம்

# பதிவாளர் திணைக்களம் 9 நாட்கள் மட்டுமே இயங்கும்

கம்பனி பதிவாளர் திணைக்களம் ஜூன் மாதத்தில் 9 நாட்கள் மட்டுமே இயங்கும் என கம்பனி பதிவாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஏனைய நாட்களில் திணைக்களம் மூடப்படும் என அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் செயற்பாடுகள் அந்தத் திகதிகளில் ஒன்லைனில் (online) மேற்கொள்ளப்படும்.

அதனடிப்படையில் கம்பனி பதிவாளர் திணைக்களம் ஜூன் மாதம் 15, 16, 17, 20, 21, 22, 27, 28, 29 ஆகிய திகதிகளில் மட்டுமே செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்திட்டங்களை செய்யாவிட்டால்

# அதிகாரிகளின் வீடுகள் தாக்கப்படலாம்!

## அமைச்சர் காஞ்சன நேற்று சபையில் எச்சரிக்கை



•யோ.தர்மராஜ்

இலங்கைக்கு இதுவரை எரிபொருள் விநியோகத்தை மேற்கொண்ட விநியோகஸ்தர்களுக்கு நீண்டகால கொடுப்பனவை செலுத்தவேண்டியுள்ளதால் தற்போது நாங்கள் எத்தனை கேள்விமனுக் கோரலை முன்வைத்தாலும், யாரும் முன்வருவதில்லை...

02 பக்கம்

# தலைமன்னாரிலிருந்து இந்தியாவிற்கு உயர் ரக ஆடுகளைக் கடத்த முயற்சி



02 பக்கம்

# வைத்தியர் ஷாபியின் நிலுவைகளை வழங்க சுகாதார அமைச்சு ஒப்புதல்



குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேறு மருத்துவப் பிரிவுக்கு சிகிச்சைக்கு வந்த பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் அவர்களுக்குத் தெரியாமல் கருத்தடை செய்யப்பட்டதாக கூறப்பட்ட போலிக் குற்றச்சாட்டின்பேரில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஷாபி சிஹாப்தீன், பணிக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

அவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதியில் வழங்கப்படாத ஏனைய கொடுப்பனவுகள் அனைத்தும் ஜூலை 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதற்கு சுகாதார அமைச்சு நேற்றுமுன்தினம் (08) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டது.

02 பக்கம்

## நாளைக்கே தேர்தலொன்றை...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் சிறந்த தலைவர்களை உருவாக்கவுள்ளோம். இலங்கை மக்களால் மூன்று முறை ராஜபக்ஷக்கள் ஆட்சி அதிகாரத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மஹிந்த ராஜபக்ஷவை இரண்டு தடவைகளும் கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு தடவையும் மக்கள் தெரிவு செய்தனர். எனவே, அடுத்த முறையும் தெரிவு செய்யப்படலாம். பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

தேர்தல் வைத்தால் நாங்கள் வீழ்ந்துள்ளோமா என்பதை பார்க்க முடியும். தேர்தலுக்குச் செல்ல ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற ரீதியில் நாங்கள் தற்போதும் தயாராகவுள்ளோம். ராஜபக்ஷக்கள் வெல்வார்களா என்பதை தாண்டி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தலுக்குச் செல்லும்.

மக்கள் வழங்கும் முடிவுக்கு நாங்கள் தலை வணங்குவோம். எனவே, நாளை என்றாலும் நாங்கள் தேர்தலுக்கு செல்லத் தயாராக இருக்கின்றோம். அடுத்த வருடம் தேர்தல் நடக்குமாக இருந்தால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிச்சயம் போட்டியிடுவோம்.

மக்கள் மத்தியில் செல்வதற்கு எங்களுக்கு அச்சமில்லை. எனவே, முடிவெடுக்கும் அதிகாரத்தை மக்களிடம் கொடுங்கள். அதுவே ஜனநாயகம். ஜனநாயகத்துக்கு சற்று செலவாகும். ஆனால், மக்கள் மத்தியில் சென்றால் ஒன்று வெல்லலாம். அல்லது தோற்கலாம். அது மக்களின் முடிவு – என்றார்.

## தலைமன்னாரிலிருந்து...

தலைமன்னார் ஊர்மனை கடற்கரை பற்றைக் காட்டுப் பகுதியில் கால்கள் கட்டப்பட்ட நிலையில் உயர் ரக 5 ஆடுகள் தலைமன்னார் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு தலைமன்னார் கிராமம் கடற்கரைப் பகுதியில் உள்ள பற்றைக் காட்டில் உயர் ரக ஆடுகள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் கிடப்பதை அவதானித்த தலைமன்னார் கடற்படையினர் குறித்த ஆடுகளை மீட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த உயர் ரக ஆடுகள் இந்தியாவுக்கு கடத்தி செல்லப்படும் நோக்கில் கால்கள் கட்டப்பட்டு கிடந்ததன் அடிப்படையில் சந்தேகத்தின்பேரில் தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது ஆடுகளை காணவில்லை என்றும் குறித்த ஆடுகள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் இருப்பதை அறிந்து உரிமை கோரியுள்ளார். இதனையடுத்து நேற்று மன்னார் நீதிமன்றில் குறித்த சம்பவத்தை தலைமன்னார் பொலிஸார் முற்படுத்தினர்.

இதன்போது, உரிமையாளரின் ஆவணங்களை பரிசீலித்த நீதவான் ஆவணங்களில் தெளிவில்லாத தன்மை குறித்து சரியான ஆவணங்களை நீதிமன்றிற்கு முற்படுத்துமாறும் அதுவரை ஆடுகள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் கண்காணிப்பில் பராமரிப்பை மேற்கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டதை அடுத்து, குறித்த ஆடுகள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தொழிற்சங்க நடவடிக்கைக்கு...

இந்த உத்தரவை சம்பந்தப்பட்ட பிரதிவாதிகளுக்கு உடனடியாக தொலைபேசி மூலம் தெரிவிக்குமாறு மாவட்ட நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிமன்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டினை விசாரித்த மாவட்ட நீதிபதியினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கை எதிர்வரும் 22ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறும், அதுவரை பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்குவதை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் தொழிற்சங்கங்களுக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

## வைத்தியர் ஷாபியின்...

நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகிய இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்னிலையில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

சேவையிலிருந்து கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்ட காலத்திற்கான நிலுவைத் தொகைகள், கொடுப்பனவுகள், இடைக்கால கொடுப்பனவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் ஆகிய சகல நிலுவைகளையும் மனுதாரர் டொக்டர் ஷாபி சிஹாப்தீனுக்கு செலுத்த முடியும் என சட்டமா அதிபரும் முன்னர் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இதேவேளை, குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் சந்தன கண்டங்கமுவ நியமித்த ஒழுக்காற்று விசாரணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகத் தயார் என மனுதாரர் வைத்தியர் ஷாபி சிஹாப்தீன் மேன்முறையீட்டு நீதிமன்றில் அறிவித்தார்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு, டொக்டர் சஹாப்தீன் தனது மனுவை வாபஸ் பெறுமாறு விடுத்த கோரிக்கையை ஏற்று, மனு மீதான விசாரணையை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு முடிவு செய்தது.







# மின்சார திருத்தச் சட்டமூலம் நேற்று சபையில் நிறைவேறியது

**யோ.தர்மராஜ்**

வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் முன்வைத்த மின்சார திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (09) ஆரம்பமான சபை அமர்வின்போது, குறித்த திருத்தம் மீதான விவாதம் நடத்தப்பட்டு நேற்று மாலை இரண்டாம் வாசிப்பு மீது வாக்கெடுப்பு நடத்துமாறு எதிர்க்கட்சி கோரியது.

அதன்படி, நடத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது, மின்சார திருத்தச்சட்ட மூலத்தின் மீதான இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 36 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 13 பேர் வாக்களிப்பை தவிர்த்திருந்தனர்.

இதேவேளை, திருத்தத்தின் மீதான மூன்றாம் வாசிப்பின்போது, எதிர்க்கட்சியால் திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்ட நிலையில், அதற்கு ஆளுந்தரப்பு எதிர்ப்பு தெரிவித்தமையால், வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதன்படி, குறித்த திருத்தத்திற்கு ஆதரவாக 58 வாக்குகளும் எதிராக 115 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன. இதனால், குறித்த திருத்தம் 58 பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை, நான்காம் வாசிப்பு மற்றும் திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது, திருத்தத்திற்கு ஆதரவாக 116 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் கிடைத்தன. இதனால், மின்சார திருத்தச் சட்டமூலம் திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

## 'கப்புட்டா' விவகாரத்தால்...

எனப் புன்னகையுடன் குறிப்பிட்டு உரையைத் தொடர்ந்தார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் காகத்துக்கு 'க்ரோ' எனக் கூறாமல், சிங்கள மொழியில் போன்று 'கப்புட்டா' என பெசில் குறிப்பிட்டிருந்தார்.

அந்த விடயம் சமூகவலைத்தளங்களில் ஹிட்டானது. 'கப்புட்டு கா... கா... பெசில், பெசில்' எனப் பாடல்கூட இயற்றப்பட்டது. அது பலரின் தொலைபேசிகளில் ரிங் டோனாகவும் மாறியது.

தனது தொலைபேசி ரிங்டோன்கூட அதுதான் என பெசில் குறிப்பிட்டார்.

## 21ஆவது திருத்தத்தை எதிர்க்கும்...

இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தன்னுடைய பதவி விலகல் குறித்து அறிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உத்தேசித்துள்ள 21ஆவது திருத்தத்திற்கு தனிப்பட்ட ரீதியில் நான் எதிர்ப்பு. மக்களுக்கு அதிகாரத்தை வழங்கும் அரசியலமைப்பு திருத்தத்திற்கு பதிலாக, தற்காலிக ஏற்பாடுகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. 69 இலட்ச மக்களின் ஆதரவை பெற்ற ஒருவரின் அதிகாரத்தை 02 இலட்ச வாக்குகளை பெற்ற ஒருவருக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாடாளுமன்றத்திற்கு அதிகாரத்தை வழங்குவதற்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம். தற்போதுள்ள பிரதமர் நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரல்ல. அவர் ஜனாதிபதியும் நாங்களும் முன்வைக்கப்பட்ட ஒருவராவார். எனவே, அவ்வாறான ஒருவருக்கு அதிகாரத்தை வழங்குவது என்பது பிரச்சினையானது.

எனினும், இதிலுள்ள சில ஏற்பாடுகள், குறிப்பாக, சுயாதீன ஆணைக்குழுக்கள் போன்றவற்றுக்கு நான் முழு ஆதரவையும் வழங்குவேன். இரட்டைக்குடியுரிமை நீக்கத்தால் நான் பாதிக்கப்படுவேன் என்பதாலேயே நான் எம்.பி. பதவியை துறந்துள்ளேன்.

உலகிலுள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் இரட்டைக் குடியுரிமையை வழங்க வேண்டும் என்ற நான் நினைக்கின்றேன். வேறு நாடுகளில் அவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இந்தியாவிலும் அவ்வாறானதொரு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, உலகிலுள்ள இலங்கையர்களின் இரட்டைக்குடியுரிமையை நீக்குவதை நான் விரும்பவில்லை.

21ஆவது திருத்தம் நிறைவேறுமா என்பது எனக்கு தெரியாது. எனினும், அதிகாரத்தை மக்களுக்கு வழங்குவது மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்காக நாங்கள் செயற்பட வேண்டும். 21ஆவது திருத்தம் யாருடையது என்பது தெரியவில்லை. ஒரு சில ஏற்பாடுகளுக்கு உரிமையாளர்கள் இருந்தாலும், சில ஏற்பாடுகளுக்கு எவ்வித உரிமையாளர்களும் இல்லை. எனவே, எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு நான் இணங்க முடியாது என்பதாலேயே நான் பதவி விலகுவதற்கு தீர்மானித்தேன் - என்றார்.

## துறைமுகங்கள் மீதான...

நவீன தொழில்நுட்பத்தினூடாக வினைத்திறனான சேவையை வழங்கி இலங்கை துறைமுகங்கள் மீதான சர்வதேச நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று (09) முற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகமானது உலகின் அனைத்து முன்னணி கப்பல் நிறுவனங்களுடனும் இயங்குகிறது. நிர்வாக சபை உட்பட முழு ஊழியர்களும் பொறுப்புடன் செயற்பட்டு அதனைப் பாதுகாக்க வேண்டுமென ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சட்டத்தை மீறி செய்யப்படும் இறக்குமதிகளால் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஏலம் விடுவதில் முறைகேடுகள் நடப்பதாக தெரியவந்துள்ளது. சதொச மற்றும் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் போன்ற அரச நிறுவனங்களால் அத்தகைய பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் ஊழல் மோசடிகளை தடுக்க முடியும் எனவும் அரசாங்கத்துக்கு வருமானத்தை ஈட்ட முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு துறைமுகத்தின் இளம் ஊழியர்களுக்கான பயிற்சிப் பிரிவை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தினதும் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தினதும் நிர்மாணப் பணிகளில் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, குறித்த காலத்திற்குள் வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களை தாமதமின்றி விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சிக்கலுக்குள்ளான ரஷ்ய ஏரோப்ளோட் விமான நிறுவனத்துடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டமை காரணமாக நிலைமையை வெற்றிகரமான முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர். இவ்வாறான சம்பவங்களை கையாள்வதில் நாடு மற்றும் இராஜதந்திர உறவுகள் தொடர்பில் வலுவான புரிதலுடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அநுர திசாநாயக்க, அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர, துறைமுக அதிகார சபையின் தலைவர் கலாநிதி பிரசன்ன ஜயமான்ன, விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோருடன் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## மின்திட்டங்களை செய்யாவிட்டால்...

என்பதோடு, விநியோகத்திலிருந்து விலகியுள்ளதாக வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அத்தோடு, மின்கட்டணத்தை அதிகரிப்பதை விடுத்து மின்னுற்பத்திக்கான செலவை குறைத்து, மின் விநியோகத்தை வழங்குவதற்கு சிறந்த திட்டங்களை செயற்படுத்தாவிடின் மக்கள் அரசியல்வாதிகளின் வீடுகளை மாத்திரமல்ல, இனி அரச அதிகாரிகள் வீடுகளையும் தாக்குவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (09) ஆரம்பமான சபை அமர்வில் வாய்மூல கேள்விக்கான விடை நேரத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்கவின் கேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் பற்றாக்குறை, மின் விநியோக தடை ஆகிய காரணிகளினால் நாட்டு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். நாட்டின் பொருளாதார பாதிப்பு, உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் வங்கி கட்டமைப்பு கடன் கடிதங்களை விநியோகிப்பதை இடைநிறுத்தியுள்ள காரணிகளே எரிபொருள் விநியோகம் மற்றும் மின் விநியோகத்துக்கும் தடையாக அமைந்துள்ளன.

இதுவரை எரிபொருள் கொள்வனவுக்காக கேள்விமனுக்கோரல் முறையை பின்பற்றி வந்தோம். ஆனால், தற்போது நாங்கள் எவ்வளவு கேள்விமனு கோரல்களை முன்வைத்தாலும் அவற்றுக்கான விநியோகத்தர்கள் முன்வர தயங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. சில விநியோகஸ்தர்களுக்கு நீண்டகால கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய நிலைமை இருப்பதே இதற்கு முக்கிய காரணமாகவுள்ளது. இதனால், குறித்த விநியோகஸ்தர்கள் எங்களுக்கான விநியோகத்திலிருந்து விலகியுள்ளனர்.

இதுவரை எங்களுக்கு வழங்கப்பட்ட கடன் எல்லை மானியம் கிடைப்பதில்லை. இருக்கும் நிதியிலேயே எரிபொருளை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு கொள்வனவு செய்தவற்காக ஜூன் மாதத்திற்கு மாத்திரம் எங்களுக்கு 550 மில்லியன் டொலர் தேவையாகவுள்ளது. இதற்கு வாய்ப்பில்லை என்பதால், யாருக்கும் பாதிப்பில்லாதவாறு கடனை செலுத்தக்கூடிய திட்டங்களை வகுத்து விநியோகஸ்தர்களுக்கு முன்வைத்துள்ளோம்.

அதற்கமைய, 90இற்கு மேற்பட்ட விநியோகஸ்தர்கள் யோசனை முன்வைத்துள்ளோம். அதன்படி, தகுதியான விநியோகஸ்தர்களுடன் நீண்டகால விநியோக ஒப்பந்தத்திற்கு அமைய செயற்பட தீர்மானித்துள்ளோம். இதுவரை நாங்கள் இந்தியாவிடமிருந்து கிடைத்த கடன் உதவியிலேயே எரிபொருட்களை கொள்வனவு செய்கின்றோம்.

இதேவேளை, எரிபொருள் வரிசைகளை குறைக்க வேண்டுமாயின் மின்சாரத்தை தடையின்றி விநியோகிக்க வேண்டும். தடையின்றி மின் விநியோகமில்லாதமையால் ஜெனரேட்டர் மின் உற்பத்திக்கு ஒரு மாதத்துக்கு தேவையான டீசலை சேகரித்து வருகின்றனர். இதனாலேயே எரிபொருள் நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

எனவே, தடையின்றி மின்சாரத்தை வழங்க வேண்டும். எனினும், தற்போதைய நிலையில் தடையின்றி மின்சாரத்தை வழங்க வேண்டுமா யின், மாதத்துக்கு 100 மில்லியன் டொலர் தேவையாகும். ஆனால், புதுப்பிக்கத்தக்க மின் திட்டத்துக்கு ஆதரவளித்தால், குறித்த 100 மில்லியன் டொலர் வெளியில் செல்லாது, உள்நாட்டிலேயே மின் உற்பத்தி செலவை குறைத்து, தடையின்றி மின்சாரத்தை வழங்க முடியும். மின்கட்டணத்தை திருத்தம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மின்சார சபைக்கு ஏற்படும் நட்டத்துக்கு அமைய, மின் கட்டணத்தை நூற்றுக்கு 300 – 400 வீதம் வரை அதிகரிக்க வேண்டும்.

ஆனால், மின்கட்டணத்தை அதிகரிப்பதை விடுத்து மின்னுற்பத்திக்கான செலவை குறைக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும். சிறந்த திட்டங்களை செயற்படுத்தாவிடின் மக்கள் அரசியல்வாதிகளின் வீடுகளை மாத்திரமல்ல, இனி அரச அதிகாரிகளின் வீடுகளையும் தாக்குவார்கள் - என்றார்.

## மக்களின் தேவை சிஸ்டம் சேஞ்ச்!...

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யும் கடிதத்தை நாடாளுமன்ற செயலாளரிடம் ஒப்படைத்துவிட்டேன். தற்போது சாதாரண பிரஜையாகவே உங்கள் முன் பேசுகின்றேன். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானத்துக்கு அமைய கடந்த வருடம் ஜூலை 7ஆம் திகதி நான் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு வந்தேன். அதன் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, என்னை நிதியமைச்சராக நியமித்தார். எனினும், கடந்த மாதத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தவிர்ந்து, ஏனைய முழு அமைச்சரவையும் பதவி விலகியது. அதற்கமைய, நானும் பதவி விலகினேன்.

அதன்படி, நிதியமைச்சிலிருந்து விலகி ஒரு மாதமாகின்ற நிலையில், இன்று (நேற்று) தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகுகின்றேன். அதன்படி, தகுதியான ஒருவரை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவருவதற்கான வாய்ப்புள்ளது.

அரச நிர்வாகம் மற்றும் அரசியல் என்ற இரண்டும் வெவ்வேறான விடயங்கள். எனவே, தற்போது நான் அரச நிர்வாக முறையிலிருந்தே விலகுகின்றேன். ஆனால், அரசியலிலிருந்து நான் விலகமாட்டேன். தேவை இருப்பின் கட்சியின் அரசியலுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன்.

நிதியமைச்சை பொறுப்பேற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமையவே நான் நாடாளுமன்றம் வந்தேன். ஆனால், தற்போது நான் நாடாளுமன்றத்துக்கு உரித்துடையவனல்ல என்றே நினைக்கின்றேன்.

நபர்கள் மாற்றம் என்பதை தாண்டி, சிஸ்டம் சேஞ்ச் என்பதையே மக்கள் விரும்புகின்றனர். ஆனால், இதுவரை நாங்கள் நபர்கள் மாற்றத்தையே முன்னெடுத்துள்ளோம். எனவே, எதிர்காலத்தில் சிஸ்டம் சேன்ஜ் ஏற்படும் என எதிர்பார்க்கின்றேன்.

என்னுடைய முழு சக்திக்கு அமைய என்னால் முடிந்ததை செய்துள்ளேன் என நினைக்கின்றேன். எனினும், மக்கள் எதிர்பார்த்த விடயங்களை நிறைவேற்ற முடியாது போனது.

இதேவேளை, நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது, பல இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்கு தொடரப்பட்டு நான் சிறையில் அடைக்கப்பட்டேன். இந்த வழக்குகளுக்கு முகம் கொடுப்பதற்காகவும் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு நான் பொறுப்பேற்க வேண்டும் எனவும் கூறப்பட்டதால், அவரை மீண்டும் மக்கள் ஏற்றுக்கொண்ட பதவிக்குக் கொண்டுச் செல்ல வேண்டும் என்பதற்காகவுமே நான் இலங்கைக்கு வந்தேன். நான் வந்த இரு விடயங்களும் நிறைவேறியது. இதனைத் தவிர, நிதியமைச்சை பொறுப்பேற்பதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் இருக்கவில்லை.

நான் பதவிக்கு வரும்போதும் பொருளாதார நெருக்கடிகள் இருந்தன. அதனாலேயே, நிதியமைச்சுப் பொறுப்பை பொறுப்பேற்றுக் கொண்டேன். நான் வந்தபின்னரே நாட்டின் அந்நிய செலாவணியில் வீழ்ச்சி ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். அவ்வாறு இருந்திருந்தால் தேவையானவற்றை கொண்டுவந்திருக்க முடியும்.

நான் சென்று பேச்சுவார்த்தை நடத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் உதவிகளுக்கு அமையவே, இன்று எரிபொருள், எரிவாயு, மா மற்றும் உரம் என்பன கொண்டுவரப்படுகின்றன. எனினும், மக்களுக்கு தேவையானவை கிடைக்காதமையினாலேயே நான் விலகினேன் - என்றார்.

# உணவு நெருக்கடியைத் தணிப்பதற்கு விரைவில் செயற்படுத்தக்கூடிய உற்பத்தித் திட்டங்கள்

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் அவதானம்







உலக சந்தை நிலைவரங்கள் மற்றும் நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள சூழ்நிலையில், நாட்டில் ஏற்படக்கூடிய உணவு நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய குறுகிய கால மற்றும் நீண்டகால உற்பத்தித் திட்டங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆராயப்பட்டது.

இவ்வருடத்துக்குத் தேவையான அரிசித் தேவையில் பெருந்தொகையானவை இந்தப் போகத்தில் அறுவடை செய்யமுடியும் என மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும், எஞ்சிய தொகையைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு வர்த்தக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது.

அத்துடன், அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்களுக்காகப் பயன்படுத்தப்படும் உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான நிதி உதவியை விரைவில் பெற்றுக் கொடுக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்குமாறும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, விவசாய அமைச்சின் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அத்துடன், குறிப்பிட்ட சூழ்நிலையில் அரிசியின் நுகர்வு அதிகரிக்கலாம் என்பதால், குறுகிய காலத்தில் அறுவடை செய்யக்கூடிய மாற்றுப் பயிர்கள் மற்றும் அரிசிக்கான மாற்றுப் பயிர்களின் சாத்தியக் கூறுகள் குறித்தும் குழு கேள்வியெழுப்பியது.

துரித உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாக "ஒன்றிணைந்து பயிர் செய்வோம் – நாட்டை வெல்வோம்" என்ற திட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இது எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட விருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இந்தத் திட்டம் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்குமாறும் குழு, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தது.

தற்போது காணப்படும் தகவல்களின் துல்லியத்தன்மை இன்மையாலும், இவற்றை அடிப்படையாகக் கொண்டு துல்லியமான பொருளாதாரத் திட்டங்களை உருவாக்க முடியாது என்பதாலும் பிராந்திய ரீதியில் உள்ள அதிகாரிகளுக்கு இதுபற்றித் தெரியப்படுத்தி தொடர்புடைய தகவல்களைப் புதுப்பிக்குமாறும் அமைச்சின் அதிகாரிகளைக் குழு வலியுறுத்தியது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான லசந்த அலகியவண்ண, திஸ்ஸ அத்தநாயக்க, உதய கம்மன்பில, சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, மொஹமட் முஸம்மில், ரஞ்சித் பண்டார, உபுல் கலப்பத்தி, வீரசுமண வீரசிங்க, ஹரிணி அமரசூரிய, ஹேஷா விதானகே, சிவஞானம் ஸ்ரீதரன், வை.ஜீ. ரத்னசேகர மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## பாரிய மக்கள் நலத் திட்டங்களை எளிமையாக ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் டக்ளஸ்





கலமிட்டிய மற்றும் வெல்லமன்கர ஆகிய இடங்களில் சுமார் 4ஆயிரத்து 500 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் இரண்டின் செயற்பாடுகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

செலவீனங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தீர்மானத்திற்கமைய, கடற்றொழில் அமைச்சில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறித்த நிகழ்வில் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திடம், குறித்த இரண்டு துறைமுகங்களும் கடற்றொழில் அமைச்சரினால் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைக் கப்பட்டன.இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், "சுமார் 500 இற்கும் மேற்பட்ட ஆழ்கடல் பலநாள் மீன்பிடிக் கலன்களையும் 300 இற்கும் மேற்பட்ட ஒருநாள் மீன்பிடிப் படகுகளையும் செயற்படுத்தும் வகையில் ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் மாவட்டத்தில் உருவாக்கப் பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் அந்தப் பிரதேசங்களில் ஏராளமான தொழில் வாய்ப்புகளையும் பொருளாதார நன்மைகளையும் ஏற்படுத்தவுள்ளது.

இவ்வாறான துறைமுகங்களை வடக்கு மாகாணத்தில் பருத்தித்துறை, பேசாலை, குருநகர் ஆகிய இடங்களிலும் உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் காலத்தில் அந்தத் திட்டங்கள் பூரணப்படுத்தப்படுகின்றபோது, அவற்றைப் பயன்படுத்தி பலனடைந்து கொள்வதற்கு வடக்கு மாகாண மக்கள் தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

அவ்வாறில்லாமல், சுயலாப அரசியல் தரப்புகளின் கருத்துகளை உள்வாங்கி, இவ்வாறான திட்டங்களுக்கு எதிரான மனோநிலையை வளர்த்துக் கொள்ளக்கூடாது என்றும் தெரிவித்தார்.

## முல்லைத்தீவில் குழுமோதல் ஒருவர் பலி: ஐவருக்கு காயம்

முல்லைத்தீவு - மல்லாவி, 4ஆம் யூனிட் திருநகர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு, இளைஞர் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இளைஞர்கள், ஒருவருக்கொருவர் தாக்குதல் நடத்தியதில் 06 பேர் காயமடைந்து மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்ட மருத்துவமனைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் இருவர் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

## அரபா மகா வித்தியாலயத்தில் புதிய கட்டட திறப்பு விழா

கம்பஹா மாவட்டம், உடுகொட அரபா மகா வித்தியாலயத்தில் குவைட் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழா நாளை (11) சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கட்டார் தூதரகத்தின் சார்பில் அதன் விசேட பிரதிநிதி அஷ்ஷெயிக் எம்.எம்.எம். பிர்தவுஸ் (நளீமி) கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு அதிதியாக அல்- ஹிமா இஸ்லாமிய சேவைகளின் செயலாளர் அஷ்ஷெயிக் எம்.ஏ.ஏ. நுருல்லா (நளீமி) பங்கேற்கவுள்ளார்.

மேலும் கம்பஹா மாவட்ட கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. அநுர பிரேமலால், நிர்வாகப் பணிப்பாளர் டபிள்யூ. சீ. ஆஜித் விஜேசுந்தர, அத்தனகல்ல வலய கல்விப் பணிப்பாளர் கே.எல்.ஜீ.எல். பிரியங்கணி, கம்பஹா, களனி வலயங்களின் பிரதிப் பணிப்பாளர் எம்.டி.எம். தௌசீர் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் கடந்த சில நாட்களாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இம்மாதத்தில் கடந்த 8 நாட்களில் மாத்திரம் 2 ஆயிரத்து 416 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இவர்களில் 54 வீதத்துக்கும் அதிகமான நோயாளிகள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

அதன்படி, கடந்த 8 நாட்களில் கொழும்பு மாவட்டத்தில் 728 நோயாளர்களும் கம்பஹா மாவட்டத்தில் 354 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். களுத்துறை மாவட்டத்தில் இந்த மாதம் 233 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடம் இதுவரையில் 26ஆயிரத்து 622 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பெசில் ராஜபக்ஷ தனது இராஜினாமா கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவிடம் நேற்று (09) கையளித்தார்.

## 13.4 மில். ரூபா பெறுமதியான உபகரணங்கள் ஐ.நா. பெண்கள் அமைப்பினால் வழங்கிவைப்பு












(அஸ்ரப் ஏ சமத்)

வடக்கில் பெண்கள் சொந்தமாக மேற்கொள்ளும் வணிகங்களை ஆதரிப்பதற்காக ஐ.நா. பெண்கள் அமைப்பு கிறிசாலிஸ் உடன் இணைந்து அண்மையில் ரூபா 13.4 மில்லியன் பெறுமதியிலான உபகரணங்கள் மற்றும் வளங்களை வழங்கினர். இந்த நடவடிக்கை கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் மீள்குடியேற்றப்பட்ட சமூகங்களில் உள்ள மீள்குடியேற்றப்பட்ட பெண்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை வலுப்படுத்தும் பாரிய செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகும்.

நிலையான வருமானம் மற்றும் நீண்ட கால சுயவேலைவாய்ப்பை ஆதரிப்பதற்காக சிறு வணிக உரிமையாளர்களை, குறிப்பாக தொழில் முயற்சியாண்மை திறன் கொண்ட பெண் குடும்பத் தலைவர்களை வலுவூட்டுவதை இந்த செயற்றிட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக, 100க்கும் மேற்பட்ட பெண் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வணிக உரிமையாளர்களுக்கு வணிக மேம்பாடு, நிதியியல் அறிவு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

ஐ.நா. பெண்கள் அமைப்பு மற்றும் கிறிசாலிஸால் நடத்தப்பட்ட பயிற்சிநெறியில் பங்கேற்ற எஸ்.ராதிகா கூறும் போது: "நான் இப்போது நம்பிக்கையான பெண் தொழிலதிபராக எனது தொழிலை நடத்தி வருகிறேன். இங்கு வழங்கப்பட்ட நான்கு வகையான வணிகத்திறன் விருத்திப் பயிற்சிகள் மூலம் எனது வணிகத்திறன் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னராக எனது தயாரிப்புகளின் விலை நிர்ணயம் மற்றும் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவது தொடர்பில் எனக்கு போதுமான அறிவு இருக்கவில்லை.

எனது பணியாளர் முகாமைத்துவமும் மிகவும் மோசமாக இருந்தது. ஆனால், இந்தப் பயிற்சிகளைப் பெற்றதிலிருந்து, கிடைக்கக்கூடிய வளங்களைத் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் தேவையற்ற செலவுகளைக் குறைப்பதற்கும் எனது திறமைகளை மேம்படுத்திக் கொண்டேன்" என்றார்.

பெண் தொழில்முயற்சியாளர் மற்றும் சிறு வணிகங்கள் பொருளாதார நெருக்கடியின் விளைவாக அதிகரித்த வாழ்க்கைச் செலவு மற்றும் அதிகரித்துவரும் வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றால் பாரபட்சமாக பாதிக்கப்படும் நேரத்தில் இந்த வகையிலான ஆதரவு வழங்கப்படுகிறது.

இந்த உதவி வழங்கல் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கே.விமலநாதன் உட்பட முக்கியமான பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**பெயர் மாற்றம்**

**233/199 ஹெனமுல்ல கேம்ப், மாதம்பிட்டிய கொழும்பு - 13ஐச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல 906692180 V கொண்ட மரதராஜ் நிஸாந்தினி ஆகிய நான் 16.12.2015 முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை மரதராஜ் பாத்திமா நிஸாரா என மாற்றிக் கொண்டுள்ளேன்.**

**தற்போது இல 54, SLPA வீட்டுத் திட்டம், ஒலுவில் - 2ஐ வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.**

**மரதராஜ் பாத்திமா நிஸாரா 10.06.2022**

**எல்பிட்டிய கிளை**

**"புதிய இடத்திற்கு"**

**பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே,**

**வாடிக்கையாளர்களினதும் வியாபாரத்தினதும் துரித வளர்ச்சியுடன் நாம் முன்னிலும் பார்க்க சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன், 2022 மே 13ஆம் திகதி தொடக்கம் எங்களுடைய எல்பிட்டிய கிளையினை அதிக இடவசதியுடைய புதிய இடத்திற்கு நகர்கின்றோம் என்பதனை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**எமது புதிய முகவரி**
**இல.40/1, அம்பலாங்கொட வீதி, எல்பிட்டிய.**

**தங்களின் அனைத்து நிதித்தேவைகளுக்கும் எமது புதிய கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**நன்றி,**
**முகாமைத்துவம்,**
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி.**

**எல்பிட்டிய கிளை - தொலைபேசி : 0912 291 828**

COMMERCIAL CREDIT

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன்தினம் சபையில் ஆற்றிய உரை குறுகியதாக இருந்தாலும், இதுவரையிலான அவரது நாடாளுமன்ற உரைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகவும், சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்திருந்தது.

தனது பதவிக்காலத்தின் எஞ்சிய இரு வருடங்களையும் பூர்த்திசெய்த பின்னர் பதவியில் இருந்து விலகப்போவதாகவும், இரண்டாவது பதவிக்காலத்துக்கு மக்களின் ஆணையைக் கேட்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருக்கும் நிலையில், அவர் ஏன் உடனடியாக பதவி விலகவேண்டும் அல்லது விலக்கப்படவேண்டும் என்பதற்கான காரணங்களை தனதுரையில் சுமந்திரன் விளக்கிக் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைவரம் குறித்தும், இடர்ப்பாடுகளில் இருந்து விடுபடுவதற்கு தனது அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க முதல்நாள் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய விசேட உரை மீதான விவாதத்தில் பங்கேற்ற சுமந்திரன், ஜனாதிபதியும், நாடாளுமன்றமும் மக்களின் ஆணைகளை இழந்துவிட்டதாகக் குறிப்பிட்டார். நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டுவந்த நடவடிக்கைகளில் முக்கியமானவற்றுக்குப் பொறுப்பான ஜனாதிபதியை பதவியில் வைத்துக்கொண்டு பொருளாதார மீட்சியை நோக்கி முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு திட்டமும் பயனளிக்கப்போவதில்லை என்றும், நாட்டில் அரசியல் உறுதிப்பாடும் ஏற்படப்போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2019 ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபிட்சத்துக்கும், சீர்மைக்குமான வருங்கால நோக்குகள்" என்ற தலைப்பிலான விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருப்பவற்றை இன்று வாசிப்பவர்கள் பொருளாதார இடர்நிலையால் ஏற்படக்கூடிய பட்டினியால் இறப்பதற்கு முன்னர் வயிறு குலுங்கச் சிரித்தே இறந்துவிடுவார்கள் என்று நகைச்சுவையாகக் கூறிய சுமந்திரன், அந்த விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டிருந்த வரிக்குறைப்பு யோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கை லெபனானினதும், வெனிசூலாவினதும் நிலைக்கு தள்ளப்பட்டுவிடும் என்று ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக நிதியமைச்சராக இருந்த காலஞ்சென்ற மங்கள சமரவீர எச்சரிக்கை செய்ததை நினைவுபடுத்தினார்.

மேலும், 2019 ஒக்டோபர் 30 இல் சமரவீர ட்விட்டர் சமூக ஊடகத்தில் செய்திருந்த பதிவொன்றையும் பற்றி சுமந்திரன் தனதுரையில் குறிப்பிட்டார். கோட்டாபயவின் வரிக்குறைப்பு யோசனைகள் இலங்கையை வங்குரோத்துநிலையை நோக்கி கடுகதி ரயிலில் ஏற்றிச்சென்றுவிடும் என்று அந்தப் பதிவில் முன்னாள் நிதியமைச்சர் எச்சரிக்கை செய்திருந்தார். அந்த பதிவு இன்றும் கூட சமரவீரவின் ட்விட்டர் கணக்கில் காணப்படுகிறது.

கோட்டாபயவின் வரிக்குறைப்பு யோசனைகள் நாட்டில் பொருளாதார அனர்த்தத்தை ஏற்படுத்தும் என்று இரண்டரை வருடங்களுக்கு முன்னரேயே எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தும் கூட அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டிருக்கிறது. பலம்பொருந்திய உறுதியான தலைவர் ஒருவர் நாட்டுக்கு தேவை என்று கூறிக்கொண்டுதான் கோட்டாபய ஆட்சியதிகாரத்துக்கு கொண்டுவரப்பட்டார். ஆனால், இன்று அவர் பலம்பொருந்திய ஒரு ஜனாதிபதியாகவா பதவியில் இருக்கிறார்? இதுவரையில் நாட்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியில் இருந்தவர்களில் மிகவும் பலவீனமான ஒரு ஜனாதிபதியாக கோட்டாபய மாறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. 69 இலட்சம் மக்களின் ஆணை இன்னமும் தனக்கு இருக்கிறது என்று அவர் கூறிக்கொண்டிருக்க முடியாது. சுபீட்சத்தைக் கொண்டுவருவதாக நாட்டுமக்களுக்கு வாக்குறுதி வழங்கிவிட்டு, இறுதியில் இன்று நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த அவர், அந்த தேர்தலில் கிடைத்த ஆணைக்கு உரிமை கோருவதற்கு தார்மீக அடிப்படையில் தகுதியற்றவராகிறார்.

மக்களின் கொந்தளிப்புக்கு மத்தியில் கடந்த மாதம் 9 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலகி அலரிமாளிகையில் இருந்து வெளியேறினார். நேற்றைய தினம் இன்னொரு சகோதரர், முன்னாள் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ச தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகும் கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்தார். செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய பெசில், மக்கள் எதிர்பார்த்ததை தன்னால் செய்யமுடியாமல் போய்விட்டது என்பதை ஏற்றுக்கொண்டார். அரசாங்க பதவிகளை ஏற்கப்போவதில்லையே தவிர, அரசியலில் தொடர்ந்தும் இருக்கப்போவதாகவும் அவர் அறிவித்திருக்கிறார். விரைவில் அவர் தனது இன்னொரு நாடான அமெரிக்காவுக்குப் பறக்கவிருக்கிறார். அவரின் மனைவி நேற்றைய தினமே அமெரிக்காவுக்கு சென்றதாக செய்திகள் கூறின. அரசியலில் தோல்விகள் ஏற்படுகின்ற வேளைகளில் பெசில் அமெரிக்காவுக்குப் பறப்பது வழமை.

ஆனால், இத்தடவை ராஜபக்ஷ குடும்பம் மக்களால் மோசமாக அவமதிக்கப்பட்ட நிலையில், அவர் விரைவில் மீண்டும் திரும்பிவந்து அரசியலைத் தொடரமுடியுமா என்பது கேள்விக்குறியே.

தனது இரு சகோதரர்களும் பதவி விலகியதிலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு படிப்பினைகள் இருக்கின்றன. தவறான பொருளாதாரக் கொள்கைகளினால் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த பொறுப்பை ஏற்று பிரதமர் பதவி விலகினார். அமைச்சரவை பதவி விலகியது. இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பதவி விலகினார். நிதியமைச்சின் செயலாளர் பதவி விலகினார். ஜனாதிபதி மாத்திரம் பதவியில் தொடர்ந்து இருக்கப்போவதாக கூறிக்கொண்டிருப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

சுமந்திரன் தனதுரையில் சுட்டிக்காட்டிய இன்னொரு விடயமும் முக்கியமாக கவனிக்கப்படவேண்டியதாகும். அதாவது, தற்போதைய நாடாளுமன்றமும் மக்களின் ஆணையை இழந்துவிட்டதாக அவர் கூறுகிறார். நாடாளுமன்ற ஜனநாயக முறையில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இருப்பதே பாரம்பரிய நடைமுறை. ஆனால், இன்றைய எமது நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் பல குழுக்கள் இருக்கின்றன. இது நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்கு முரணானதும், ஜனநாயகத்துக்கு விரோதமானதுமாகும் என்று சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரைப் பொறுத்தவரை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மக்களின் ஆணையுடன் புதிய நாடாளுமன்றம் அமைக்கப்படவேண்டும். தற்போதைய நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு அரசியல் உறுதிப்பாட்டையோ, பொருளாதார மீட்சியையோ ஒருபோதும் ஏற்படுத்தமுடியாது. தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் இலட்சக்கணக்கான டொலர்கள் இழக்கப்படும் என்பது அவரது நிலைப்பாடு. ஐக்கிய தேசிய கட்சியின் ஒரேயொரு உறுப்பினராக நாடாளுமன்றத்தில் இருக்கும் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதில் உள்ள ஜனநாயக விரோதத்தையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

சுமந்திரன் தனது உரையில் முன்வைத்த கருத்துகள் மக்கள் போராட்டங்களுக்கு மத்தியில் அரசியல் வாதப்பிரதிவாதங்களில் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கின்றன. ஜனாதிபதியும், நாடாளுமன்றமும் மக்களின் ஆணையை இழந்துவிட்டதாகக் கூறும் அவரது வாதத்துக்கு தகுதியான பதில் வாதத்தை எவராலும் முன்வைக்கக்கூடியதாக இருக்கும் என்று தமிழன் நம்பவில்லை.

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூன் 10ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# சிந்தனையைத் தூண்டும் சுமந்திரனின் நாடாளுமன்ற உரை

# கச்சதீவுக்கொரு தீர்வு காண்போம்!

உதயை மு.வீரையன்



தமிழ்நாட்டின் கச்சதீவை இந்திய அரசு இலங்கைக்குக் கொடுத்து விட்டதால் தமிழ்நாட்டுக் கடலோர மீனவர் சமுதாயம் பேரிழப்பிற்கு ஆளாகிறது. இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க இதுவே தக்க தருணம்.

இலங்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இந்தியா எப்போதும் போல் இப்போதும் ஆதரவுக் கரம் நீட்டி நிற்கிறது. துன்பம் நேரிட்டால் துணை நிற்பது மனிதநேயம் என்பது சரிதான். ஆனால், மனிதநேயம் கொண்டவர்களுக்கு துணைநிற்பது என்பது அதைவிட சரியானது.

இலங்கையின் நெருங்கிய அண்டை நாடாக பல நூற்றாண்டு கால உறவு இந்தியாவுக்கு உள்ளது. அங்கு மக்களாட்சி, நிலைத்த தன்மை, பொருளாதார மீட்சி திரும்பிட இந்தியா தனது முழுமையான ஆதரவை அளிக்கிறது. அதற்காக கடந்த மாதம் ரூ. 11,400 கோடி நிதியுதவியை இந்தியா வழங்கியது. மேலும், மருந்து, உணவுப் பொருட்களையும் இலங்கைக்கு அனுப்பியது. தமிழக அரசும் தனது பங்கிற்கு ரூ.45 கோடி அளவில் உதவிப் பொருட்களை அனுப்பி வைத்தது.

இந்திய அரசாங்கத்தினால் "நட்பு நாடு" என்று கூறப்படும் இலங்கை, தமிழ்நாட்டு மீனவர்களை நாள்தோறும் வேட்டையாடுகிறது. இதுவரை ஆயிரக்கணக்கான மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களை தொழில் செய்ய விடாமல் பிடித்து, அடித்து, அவமானப்படுத்தி சிறைபிடிக்கிறது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பறிக்கப்படுவதை இன்னும் எத்தனை காலம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது?

2022 ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் சமயத்தில் 68 தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறையில் கைதிகளாக அடைக்கப்பட்டிருந்தனர். இராமேஸ்வரம், மண்டபம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 43 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர். இதேபோல் புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களை படகுகளுடன் அடுத்தடுத்த நாட்களில் சிறைபிடித்துச் சென்றனர்.

உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும், மத்திய அரசு முயற்சி மேற்கொண்டும் விழா நாட்களில் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. தமிழக அரசுத் தரப்பில், "கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்பவர்களே தவிர, தீவிரவாதிகள் இல்லை. அவர்கள் காரணமின்றி துன்புறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்" என்று கூறப்பட்டது.

கடந்த ஆண்டில் மட்டும் இலங்கை கடற்படையினர் 19 முறை தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பல படகுகள் அழிக்கப்பட்டு ஐந்து மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரை 73 படகுகளை பறிமுதல் செய்துள்ளனர். அவற்றைத் திருப்பித் தரவில்லை. அன்று முதல் இன்று வரை, தமிழக முதல்வர்கள் இந்தியப் பிரதமர்களுக்கு கடிதம் எழுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மத்தியில் அன்று காங்கிரஸ் ஆண்டது. இப்போது பா.ஜ.க. ஆள்கிறது. ஆனாலும், எந்த மாறுதலும் இல்லை. நிலைமை அப்படியே தொடர்கிறது. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படும்போதுதான் கச்சதீவு கவனத்துக்கு வருகிறது. கச்சதீவு இந்திய கட்டுப்பாட்டில் இருந்தபோது தமிழக மீனவர்கள் தாக்கப்படவில்லை. கச்சதீவு இலங்கைக்கு கைமாறிய பிறகுதான் இலங்கைக் கடற்படைக்கு துணிச்சல் வந்திருக்கிறது.

கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதி. நாட்டின் எந்தவொரு பகுதியையும் வேறு நாட்டிற்கு விட்டுக் கொடுப்பதென்றால், இந்திய அரசியல் சட்டம் 368ஆம் பிரிவின்படி நாடாளுமன்றத்தில் விவாதித்து, ஒப்புதல் பெற்று அதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும்.

இந்தத் தீவு விஷயத்தில் எந்த விதிமுறையும் பின்பற்றப்படவில்லை. 1974ஆம் ஆண்டு இந்திய அரசு ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாக இலங்கைக்கு கச்சதீவைக் கொடுத்து விட்டது. நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறாத காரணத்தால் இந்த ஒப்பந்தம் செல்லாது என்று தமிழ்நாட்டின் சார்பாக 1991ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார்.

உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு எழுத்துபூர்வமாக பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில் "கச்சதீவு எந்த நாட்டுக்கும் சொந்தமில்லாமல் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கச்சதீவுக்கு யார் உரிமை கொண்டாடுவது என்ற பிரச்சினை இந்தியா - இலங்கை இடையே நீடித்து வந்தது. அதைத் தொடர்ந்து இந்திய-இலங்கை கடற்பகுதியில் சர்வதேச எல்லைக் கோட்டை நிர்ணயித்தபோது கச்சதீவு இலங்கை வரம்புக்குள் சென்றுவிட்டது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அந்தத் தீவைச் சுற்றியுள்ள கடற்பகுதியின் மீன்பிடிக்கும் உரிமை தமிழ்நாட்டுக்குக் கிடையாது. இருந்தபோதும் மீன் பிடிக்கும்போது இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்படும் தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது" என்றும் பிரமாணப் பத்திரத்தில் இந்திய மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

கச்சதீவு, யாழ்ப்பாணத்திலிருந்து 70 கி.மீ. தொலைவிலும், இராமேஸ்வரத்திலிருந்து 18 கி.மீ. தொலைவிலும் இருக்கிறது. இதன் மொத்தப் பரப்பளவு 1.15 கி.மீ. புனித அந்தோனியார் திருக்கோயில் மட்டுமே அங்கே இருக்கிறது. வேறு எவ்விதக் கட்டுமானமும் இல்லை. 1974ஆம் ஆண்டு இந்திய பிரதமராக இந்திரா காந்தியும், இலங்கை பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கவும் இருந்தபோது இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

அப்போதைய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்வரண்சிங் 1974 ஜூலை 23 அன்று கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்துவிட இந்தியா முடிவெடுத்து விட்டதை நாடாளுமன்றத்தில் அறிவித்தார். 1976இல் மீண்டும் ஒருமுறை இது தொடர்பாக இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இந்திய - இலங்கை கடற்பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்கு கச்சதீவைக் கொடுத்து சிறிமாவோ பண்டாரநாயக்க இலங்கையில் செல்வாக்குப் பெற்று பதவியில் நீடிப்பதற்காக இந்திரா காந்தி எடுத்த இராஜதந்திர முடிவு என்றும், 40 ஆண்டுகள் கழித்து தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் குரல் எழுப்புகின்றன என்றும் அப்போது ஆளும் தரப்பில் கூறப்பட்டது.

தமிழ்நாட்டில் அப்போது தி.மு.க.தான் அதிகாரத்தில் இருந்தது. தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியே முதலமைச்சராகவும் இருந்தார். அப்போது தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வலுவாகவே இருந்தது. இருந்தும், மாநில அரசின் ஒப்புதல் இன்றி மத்திய அரசே ஒரு தரப்பாக முடிவெடுத்தது. இலங்கை நட்பு நாடு என்ற முறையில் கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்தது. அதன் தொடர்ச்சியாகவே இப்போது இந்த பிரச்சினை எழுந்துள்ளது. மாநில அரசு மத்திய அரசிடம் விண்ணப்பம் வைத்துள்ளது. இந்தியாவின் தயவை எதிர்பார்க்கும் ஒரு நாடு இந்தியாவின் வேண்டுகோளை மறுதலிக்காது என்று எதிர்பார்க்கின்றனர்.

கச்சதீவு தமிழ்நாட்டின் இராமநாதபுரம் பகுதியை ஆண்ட சேதுபதிகளுக்கு வருவாய் தரும் தீவாக முன்பு இருந்தது. 1947இல் ஜமீன்தாரி ஒழிப்பு சட்டம் வரும் வரை அது அவர்களது ஆட்சியில்தான் இருந்தது. இதற்கு ஆதாரங்களும், ஆவணங்களும் உள்ளன.

இந்தத் தீவு முத்துக் குளிக்கவும், மூலிகைச் செடி, கொடி, வேர்களைக் கொண்டு வரவும், மீன்பிடித் துறையாகவும் பயன்பட்டு வந்தது. அந்தத் தீவினை சேதுபதிகளே குத்தகைக்கு விட்டு வருவாய் பெற்று வந்தனர். இவ்வாறு இராமநாதபுரம் சேதுபதிகளின் ஆட்சியில் கச்சதீவு இருந்து வந்தது என்பதற்கு 1822 முதல் வரையறையான சான்றுகள் உள்ளன.

சேதுபதிக்கு 69 கடற்கரை ஊர்களும், 8 தீவுகளும் உரிமை உடையனவாக இருந்தன. அந்த எட்டு தீவுகளில் ஒன்றுதான் கச்சதீவாகும். 1822ஆம் ஆண்டு ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, சேதுபதியிடம் 69 கடற்கரை ஊர்களில் வணிகம் செய்யவும், தீவுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தது.

இந்திய அரசோடு இராமநாதபுரம் சமஸ்தானம் இணைந்தபோது இராமநாதபுரம் மன்னருக்கு சொந்தமான கச்சதீவும் இந்தியாவோடு சேர்ந்துவிட்டது. இந்த உண்மைகளையெல்லாம் மறைத்து விட்டு, கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது என்று உச்சநீதிமன்றத்திலேயே இந்திய அரசாங்கம் கூறியுள்ளது.

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், புதுடில்லி வந்தபோது செய்தியாளர்களை சந்தித்தார். "கச்சதீவை இலங்கை வசம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் முறைப்படி அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்திதான் கையொப்பமிட்டுள்ளார். அதன்படி சர்வதேச எல்லைக்குட்பட்ட கச்சதீவு இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒப்பந்தத்தில் இலங்கை மீனவர்களுக்கும், இலங்கைக்கும் கச்சதீவில் உள்ள உரிமைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் இந்திய அரசின் நிலை தெளிவாக உள்ளது. எனவே, கச்சதீவை இந்தியாவிடம் திரும்ப ஒப்படைக்கும் பேச்சுக்கே இடமில்லை" எனத் தெரிவித்தார்.

இந்திய அரசின் பிரமாண வாக்குமூலம் இதையும் விஞ்சி விட்டது.

மீனவர் பிரச்சினை தலைதூக்கும்போதெல்லாம் கச்சதீவு பிரச்சினையும் தலையெடுக்கும். அந்த அளவுக்கு அவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அதை இரு நாடுகளும் கவனத்தில் கொள்வது நல்லது.

கச்சத்தீவு ஆண்டாண்டு காலமாக தமிழகத்துக்கே சொந்தமாக இருந்து வந்தது. அதுவே தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு எல்லையாகவும் இருந்து வந்தது. அதனை இந்திய அரசு, 1974ஆம் ஆண்டு இலங்கைக்கு தூக்கிக் கொடுத்துவிட்டது. அப்போது முதலே மீனவர்களின் பிரச்சினை தொடங்கி விட்டது.

1974ஆம் ஆண்டு ஒப்பந்தம் கச்சதீவை இலங்கைக்கு அளித்தது. 1976ஆம் ஆண்டு ஒப்பந்தம் கச்சதீவு பகுதிக்கு தமிழக மீனவர்கள் போகக்கூடாது, மீன் பிடிக்கவும் கூடாது. ஆண்டுதோறும் நடக்கும் அந்தோனியார் திருவிழாவுக்கும் மக்கள் போகக் கூடாது என்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

1991ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று சென்னை சென். ஜோர்ஜ் கோட்டையில் கொடியை ஏற்றிவிட்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதா கச்சதீவை மீட்கப்போவதாக சபதம் செய்தார். "தமிழக மீனவர் நலன் காக்க கச்சதீவை மீட்போம்" என்ற முழக்கத்தை முன்வைத்தார். 1991 ஒக்டோபர் 4ஆம் நாள், தமிழக சட்டப்பேரவையில் கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்கக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கச்சதீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை இப்போது மறுபடியும் எழுந்துள்ளது. தமிழக மீனவர்கள் தங்களின் வாழ்வாதார உரிமையைத்தான் கேட்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி செய்த தவறைத் திருத்தம் செய்ய அடுத்தடுத்து வரும் ஆட்சிகளுக்கு அதிகாரம் இருக்கிறது. அதனை நிரூபிக்க இது ஒரு வாய்ப்பு. இப்போதே கச்சதீவுக்கொரு தீர்வு காண்போம்.

## நக்கல் நமசிவாயம்

கரண்ட் இல்லாம நேத்து ரொம்ப நேரம் கஷ்டப்பட்டது கூட கவலையில்ல பாருங்கோ... ஆனா, ராஜபக்ஷமார் திருப்பி எலெக்ஷன் கேக்க ரெடியா இருக்கிறதா பெசில் சொன்னதுதான் லைட்டா...



## இன்றைய நாளில்...

- 1786 – சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் பத்து நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த நிலநடுக்கம் காரணமாக டாடு ஆற்றின் அணை உடைந்ததில் வெள்ளப்பெருக்கில் சிக்கி 100,000 பேர் உயிரிழந்தனர்.
- 1801 – சிவகங்கையின் சின்னமருது ஆங்கிலேயர்களின் அதிகாரத்தை உதறித்தள்ளி சுதேசி மன்னர்களின் கீழ் ஜம்புத்தீவின் மக்கள் வாழவேண்டும் என்ற தனது விடுதலைப் பிரகடனத்தை திருச்சியில் வெளியிட்டார்.
- 1956 – இலங்கையில் அம்பாறையில் 150 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1957 – கனடாவில் 22 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த லிபரல் கட்சி அரசு பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தது.
- 1984 – தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு சிறையை உடைத்து அரசியல் கைதியாக இருந்த நிர்மலா நித்தியானந்தனை விடுவித்தனர்.
- 1986 – மண்டைதீவுக் கடல் படுகொலைகள்: யாழ்ப்பாணம், மண்டைதீவில் குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1990 – இலங்கை இராணுவத்துக்கு எதிரான விடுதலைப் புலிகளின் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தது.
- 1998 – முல்லைத்தீவு, சுதந்திரபுரப் பகுதியில் இடம்பெற்ற வான் தாக்குதலில் 25க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்.
- 2002 – இரண்டு மனிதர்களின் நரம்பு மண்டலங்களுக்கு இடையில் முதல் நேரடி மின்னணுத் தொடர்புப் பரிசோதனை ஐக்கிய இராச்சியத்தில் கெவின் வாரிக் என்பவரால் நடத்தப்பட்டது.
- 2003 – நாசாவின் இஸ்பிரிட் விண்கலம் செவ்வாய்க்கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 2006 – ஈழத்தமிழர் படுகொலைகள்: மன்னார், வங்காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

# இம்முறை ஹஜ் செய்பவர்கள் தங்களை அவசரமாகப் பதிவுசெய்யுமாறு கோரிக்கை

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இவ்வருடம் இலங்கையிலிருந்து ஹஜ் யாத்திரிகர்களை அனுப்புவதற்கு புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அனுமதி வழங்கியுள்ளார்.

சவூதி அரேபிய அரசாங்கம், இலங்கையிலிருந்து இவ்வருடம் ஆயிரத்து 585 யாத்திரிகர்களுக்கு ஹஜ் செய்வதற்கான ஒதுக்கீட்டை வழங்கியிருக்கிறது.

எனவே, பதிவுசெய்த மற்றும் நிர்வாக பதிவுக் கட்டணங்களை செலுத்திய யாத்திரிகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டாலும் 'முதல் பதிவுக்கு முன்னுரிமை' என்றவகையில் யாத்திரிகர்களுக்கு ஹஜ் பயணத்திற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதால், இம்முறை ஹஜ் செய்பவர்கள் தங்களை மிக அவசரமாகப் பதிவுசெய்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தலைமையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், காதர் மஸ்தான், இஸ்ஹாக் ரஹ்மான், மர்ஜான் பளில், முஸர்ரப் முதுநவின் ஆகியோரும், அகில இலங்கை ஹஜ் முகவர் சங்கம் மற்றும் ஹஜ் பயண முகவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட சந்திப்பொன்றின்போது, இவ்வருடம் ஹஜ் யாத்திரைக்கான அரசாங்கத்தின் இணக்கத்தை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உறுதிப்படுத்தினார்.

இச்சந்திப்பில் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன, புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி நயனா நாதவிதாரண மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்றாஹிம் அன்சார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வருட ஹஜ் யாத்திரைக்காக மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களின்படி ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், கட்டணமாக நியாயமான தொகையை அறவிடுமாறும் ஹஜ் பயண முகவர் சங்கங்களுக்கு புத்தசாசன மத விவகார மற்றும் கலாசார அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

இவ்வருடம் ஹஜ் கடமையை நிறைவேற்ற ஆர்வமுள்ள இலங்கையர்கள், மிக அவசரமாக பங்கேற்பதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கீழே கோரப்பட்டுள்ள விவரங்களை வழங்குமாறும், பின்வரும் கட்டணங்களை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்குச் செலுத்தி பணம் செலுத்தியதற்கான உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறும் விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

01. பதிவுக் கட்டணம் ரூ. 4,000.00 (ஹஜ் பயண முகவர் மூலம் செலுத்தப்படும்)

02. பயண உறுதிப்படுத்தல் கட்டணம் (மீளளிப்பு வைப்புத் தொகை) ரூ. 25,000.00

03. ஏற்கனவே பதிவு செய்திருந்தால், பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி.

04. செல்லுபடியான கடவுச்சீட்டின் பிரதி.

05. ஹஜ் யாத்திரை நோக்கத்திற்காக 1,500 அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டிலிருந்து இலங்கையில் குறித்தொதுக்கப்பட்ட டொலர் கணக்கிற்கு மாற்றுதல் வேண்டும்.

06. பதிவுசெய்த மற்றும் நிர்வாக பதிவுக் கட்டணங்களை செலுத்திய யாத்திரிகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருப்பினும் 'முதல் பதிவுக்கு முன்னுரிமை' என்றவகையில் யாத்திரிகர்களுக்கு ஹஜ் பயணத்திற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

07. பதிவுசெய்யப்பட்ட யாத்திரிகர்களுக்கு தமக்கு விருப்பமான ஹஜ் முகவர்களை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இலங்கை அரசாங்கத்தின் தீர்மானத்தை பொருத்தமான இராஜதந்திர வழிகள் மூலம் சவூதி அரேபிய அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பின்வரும் உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். எம்.எவ்.ஏ.அசாத், அபிவிருத்தி உத்தியோகத்தர், ஹஜ் பிரிவு - தொலைபேசி: 0773775941, எம்.ஐ.எம்.முனீர், அபிவிருத்தி உத்தியோகத்தர், ஹஜ் பிரிவு - தொலைபேசி: 0761398620, எம்.எச்.என்.எவ்.கரீமா, அபிவிருத்தி உத்தியோகத்தர், ஹஜ் பிரிவு - தொலைபேசி: 0776146318, எம்.ஏ.சி.எம். றியாஸ் அபிவிருத்தி உத்தியோகத்தர், ஹஜ் பிரிவு - தொலைபேசி: 0777895667.

## 09.06.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 142 4214 | 154 11 7 |
| கனேடியன் டொலர் | 170 664 | 183 444 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 1737 | 44 2103 |
| யூரோ | 268 40 4 | 283 6338 |
| ஜப்பான் யென் | 1 5215 | 1 6336 |
| சிங்கப்பூர் டொலர் | 145 6751 | 156 4761 |
| ஸ்ரேலிங் பவுன் | 332 3050 | 350 2 0 |
| சுவிஸ் பிராங்க் | 250 2356 | 266 4814 |
| ஐ.அ.டொலர் | 244 7072 | 255 6845 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 843 8257 |
| குவைட் | குவைட் தினார் | 0,063 7151 |
| ஓமான் | ஓமான் றியால் | 824 008 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 5233 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 8624 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 070 |

# மன்னார் நீதிமன்றத்தில் நடந்த நெகிழ்ச்சி சம்பவம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மேல் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் தந்தையொருவர் 18 வயதிற்கு குறைந்த பிள்ளையொருவருக்கு உலோக கரண்டியை சூடாக்கி சுட்டதாக - அதாவது, சித்திரவதை செய்ததாகக் கூறி இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 308அ இன் கீழ் குற்றப்பகர்வு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கை தொடர்ந்து வாதாட விரும்பாத தந்தை, தான் குற்றவாளி என மன்றுரை செய்ததன் பின்னர் அவரின் மகளாகிய 14 வயது சிறுமியும் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

குறித்த தந்தை சார்பாக நீதிமன்றத்தில் சட்டத்தரணி டினேஸன் ஆஜராகியிருந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி எதிரியின் சொந்த மகள் எனவும் அந்த சிறுமி இன்றைய தினம் தனது தந்தையுடனேயே நீதிமன்றம் வந்துள்ளதாகவும் இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையென்றும் இவர் கடற்றொழில் செய்தே தனது குடும்பத்தை பராமரித்து வருவதாகவும் இவருக்கு சிறைத்தண்டனை விதிக்கபஙபடும் சந்தர்ப்பத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அந்த குடும்பம் அந்த சிறுமி உட்பட அனைவரும் பாதிக்கப்படுவார்கள் என்றும் ஒத்திவைத்த சிறைதண்டனையோ அல்லது தண்ட பணத்தினால் தண்டிக்குமாறும் விண்ணப்பத்தினை பதிவுசெய்திருந்தார்.

வழக்குத்தொடுனர் சார்பாக தோன்றிய அரச சட்டத்தரணி குறித்த குற்றச்சாட்டுக்கு தண்டணையாக 2 வருடங்கள் குறையாத 10 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணம் மற்றும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென இலங்கை தண்டணைச் சட்டக்கோவையின் பிரிவு 308அ(2) கூறுவதாகவும் ஆதலால் கட்டாய சிறைத்தண்டனை வழங்க வேண்டும் என்றும் ஒத்திவைத்த சிறைத்தண்டணை வழங்க முடியாது எனவும் உயர் நீதிமன்றத்தின் தீர்க்கப்பட்ட வழக்குகளை மேற்கொள்காட்டியும் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதை அரசியலமைப்பின் உறுப்புரிமை மற்றும் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு சமவாயத்தினையும் எடுத்துக்காட்டி அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட வேண்டுமென விண்ணப்பம் செய்திருந்தார்.

இருபக்க விண்ணப்பத்தினையும் செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி அந்த சிறுமியை அழைத்து இந்தச் சம்பவத்திற்கு பிறகு வேறேதும் துன்புறுத்தல் ஏற்பட்டதா என வினவினார். அந்த சிறுமி இல்லையென்றும் அப்பா எங்களை நல்லா பார்த்துக்கொள்கின்றார் என்றும் கூறியுள்ளார்.

அதன்பின்னர் உங்களை யார் பார்த்துக்கொள்கின்றார் என கேட்க, மழலை மொழியில் அப்பா டொலர் தொழில்செய்து உழைக்கின்றார் என்றும் நானும் தம்பி, தங்கைகள் இருக்கின்றார்கள் என்றும் அம்மா வீட்டில்தான் இருக்கின்றார் என்றும் சிறுமி கூறியுள்ளார்.

இரு பக்க வாதப்பிரதிவாதங்களை ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி, சட்டம் கட்டாயம் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று ஏற்பாட்டினை கொண்டிருந்தாலும் வழக்கின் தன்மை எதிரியின் குடும்ப நிலை என்பவற்றை கருத்திற்கொண்டு 2 வருட சிறைத்தண்டனை 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டும் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்தார்.

தண்டப்பணத்தினை செலுத்துவதற்காக எதிரி சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டார். தனது தந்தை சிறையில் அடைக்கப்பட்டதைப் பார்த்த சிறுமி நீதிமன்றத்தில் சத்தமிட்டு அழுதுள்ளார். இந்நிலையில் அங்கிருந்த பெண் பொலிஸார் அச்சிறுமியை அழைத்துக்கொண்டு வெளியே சென்றுள்ளனர். மீண்டும் வழக்கும் அழைக்கப்பட்டது. சிறுமியின் அழுகை நிற்கவில்லை. மேல் நீதிமன்ற நீதிபதி அச்சிறுமியை அழைக்குமாறு கூறினார். ஏன் அழுகின்றீர்கள் என வினவினார். சிறுமி அப்பா வேண்டும் என்று அழுததும் நீதிபதி, அழ வேண்டாம் அப்பா வருவார். அப்பாக்கு சிறைத்தண்டனை வழங்கப்படவில்லையென ஆறுதல் கூறினார்.

அதன்பின்னர் மன்றுக்கு கருத்து தெரிவித்த நீதிபதி, சட்டத்தில் கட்டாய சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டுமென கூறியிருக்கின்றபோதிலும் இவ்வாறான புற விடயங்களையும் அவதானிக்க வேண்டுமெனவும் சிறைத்தண்டனை விதிக்கப்படும் பட்சத்தில் குடும்பம் மாத்திரமல்ல சிறுமியும் பாதிக்கப்படுவாரென கூறினார்.

குறித்த சம்பவம் நேன்றைய தினம் நீதிமன்றத்தில் நெகிழ்ச்சியினை ஏற்படுத்திருந்தது.

# தமிழக நிவாரணம் பலாங்கொடைக்கு



(பலாங்கொடை செய்தியாளர்)

தமிழக அரசால் வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் பலாங்கொடை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெட்டிகல, மெந்தகந்த, ராசகல, விக்கிலி ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு நேற்று (09) வழங்கப்பட்டன.

குறித்த நான்கு தோட்டங்களிலும் ஆயிரத்து 866 குடும்பங்களுக்கு இந்த நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

# பெருந்தோட்ட மக்களின் சமூக பிரச்சினை குறித்து தெளிவூட்டும் நிகழ்வு காலியில்







(தெனியாய செய்தியாளர்)

இலங்கையிலுள்ள பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை மற்றும் சமூக பிரச்சினைகள் குறித்து ஊடகவியலாளர்களை தெளிவூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் காலி கரித்தாஸ் செட் கோல் நிறுவனத்தில் இடம்பெற்றது.

காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி, கொழும்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

'பெருந்தோட்ட மக்களின் விடியலை நோக்கி' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த தெளிவூட்டல் கருத்தரங்கின்



வளவாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜா கலந்துகொண்டார்.

காலி கரித்தாஸ் செட் கோல் நிறுவனத்தின் பணிப்பாளர் லசந்த பொன்சேகா பெருந்தோட்ட மக்களின் விடியலை நோக்கி அமைப்பின் தேசிய இணைப்பாளர் மைக்கல் ராஜேந்திரன் அடிகளார் ஆகியோரும் இதன்போது பங்கேற்றிருந்தனர்.

# இரண்டரை வருடங்கள் கோமாவில் இருந்த ஆளுங்கட்சி எம்.பிக்கள்

## காலநிலை மாற்ற நிகழ்ச்சிபோல் ரணிலின் உரையென இம்ரான் மஹ்ரூப் சாடல்

(அப்துல்சலாம் யாசீம்)



இந்த அரசாங்கத்தில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு அல்லது இரண்டரை வருடங்கள் கோமாவில் இருந்து இப்போதுதான் கண்ணை விழித்திருக்கிறார்களா? அவர்களுக்கு அவர்களுடைய செயற்பாடுகள் எல்லாம் மறந்து இன்று புதிதாக பிறந்திருக்கிறார்களா? என்ற சந்தேகம் எழுவதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இவர்கள் பல வீரப்பேச்சுக்களை பேசும் சந்தர்ப்பங்களிலெல்லாம், இந்த அரசாங்கம் செய்கின்ற செயற்பாடுகளை சரி என நியாயப்படுத்தியவர்கள் இன்று அமைதி காத்துத் கொண்டும் பசுத்தோல் போத்திய புலி போல் பதுங்கிக்கொண்டிருப்பதாகவும் நேற்றுமுன்தினம் (08) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில், இந்த அரசங்கத்தில் இருக்கின்ற எம்.பிக்கள் சொன்னார்கள் இந்த நாட்டை நாங்கள் வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்குவோம். இந்த நாடு ஒரு சிங்கப்பூராக மாறும் என்று சொன்னவர்கள் எல்லாம் இன்று ஆலோசனை வழங்குகின்ற ஆலோசகராக இருக்கின்றார்கள்.

உண்மையிலேயே இதனுடைய முழுப் பொறுப்பையும் மொட்டு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே ஏற்க வேண்டும் என்பதை நாங்கள் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறோம்.

குறிப்பாக, இந்த அரசாங்கம் செய்த சில விடயங்கள், செயற்பாடுகள் காரணமாகத்தான் இன்று இந்த நாடு இந்த நிலைக்கு வந்திருக்கிறது என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இவர்கள் இனவாதத்தை ஏற்படுத்தியன் காரணமாக அந்த மக்களின் சாபமும், விவசாயிகளுக்கு செய்த அநியாயத்திற்காக அந்த மக்களின் சாபமும், ஏழைமக்களின் சாபமும் இந்த அரசாங்கத்தையும் நாட்டையும் இந்த நிலைக்கு கொண்டுவந்துள்ளது.

இப்போது பிரதமர் ஆற்றுகின்ற உரைகளை கேட்கின்ற போது காலநிலை மாற்றத்தை கூறுகின்ற நிகழ்ச்சி போல் உள்ளது. இவர் பதவி ஏற்கின்ற பொழுது அவருடைய நண்பர்கள், ஆதரவாளர்கள் மற்றும் கட்சிப் போராளிகள் தெரிவிக்கையில் இவர் நாட்டினுடைய பிரதமராக வந்தால் ஒரு மாதத்திற்குள் நாட்டிற்குத் தேவையான டொலரை கொண்டுவருவதற்கு தகுதியானவர் என்று சொன்னார்கள். இப்போது அது அப்படியே மாறி டொலர் பெறுமதி அதிகரித்திருக்கிறது. இன்று வரிசையில் நிற்கின்றவர்களுடைய எண்ணிக்கை கிலோ மீட்டர் கணக்கில் நீண்டு கொண்டிருக்கிறது.

இங்கு என்ன நடைபெற்றது இதை நாம் எவ்வாறு தீர்க்க வேண்டும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இன்று ஒரு குடும்பத்திற்கான செலவு மூன்று மடங்காக அதிகரித்திருக்கின்றது. உதாரணமாக முப்பதுனாயிரம் வருமானம் பெறும் குடும்பத்திற்கு நாற்பத்தி ஐயாயிரம் தேவைப்படுகிறது. ஆகையால் அவர்கள் மிதியாக தேவையான பணத்தை எப்படி பெறுவது? எங்கே கடன்பெற போகிறார்கள்? எப்படி திருப்பி சொலுத்தப்போகின்றார்கள் என்பதை சிந்திக்கவேண்டும். இந்த நிலை தொடர்ந்தால் சோமாலியா அல்லது ஆப்பிரிக்காவில் உள்ள சில நாடுகளைப்போல் எமது நாடும் மிக மோசமான நிலைக்கு வந்துவிடும்.

ஆதில் விஷேட கவனம் செலுத்தவேண்டும் விலை அதிகரிப்பின் காரணமாக போசாக்கு சம்பத்தமான நோய்கள், களவு, கொள்ளை மன்றும் பிள்ளைகளை கடத்தல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்திருக்கிறது என்றார்.




# பொருளாதார நெருக்கடியால் மட்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

நாட்டில் நிதி நெருக்கடியால் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தட்டுப்பாடுகள், பொருட்களுக்கான விலையேற்றம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் தமிழர்களின் பாரம்பரிய தொழில்களில் ஒன்றாக காணப்படும் மட்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், மடுக்கரை, செம்மண் தீவு கருக்காய் குளம் போன்ற பகுதிகளில் வசிக்கும் மட்பாண்டத் தொழிலாளர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு, எரிபொருளுக்கான விலையேற்றம் காரணமாக சட்டி, பானை, அடுப்பு, சிட்டி விளக்குகள் போன்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்புபோல் வியாபாரிகள் எவரும் எங்களிடம் வந்து பெற்றுக்கொள்வதில்லை.

அதனால் தூரப்பிரதேசங்களுக்கு பொருட்களைக் கொண்டுசென்று கொடுத்தால் செலவு இரட்டிப்பாகிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் யாவும் தேங்கிக் கிடக்கின்றன.

எனவே, இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட்டு எரிபொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களும் தடையில்லாமல் விலை குறைவாக கிடைத்தால் மட்டுமே எமது பாரம்பரியத் தொழிலை தொடர்ச்சியாக செய்ய முடியும். மேலும், பலர் இந்தத் தொழிலிலிருந்து விலகி வேறு தொழிலுக்குச் சென்றுள்ளார்கள்.

தங்களது காலத்தின் பின்பு தமிழர்களின் பாரம்பரிய தொழிலாக காணப்படும் இந்த மட்பாண்டத் தொழிலை தொடர்ந்து செய்வதற்கு ஆட்கள் இல்லை.

காலப்போக்கில் மன்னார் மாவட்டத்தில் இந்த மட்பாண்டத் தொழில் அழிந்து போகக்கூடும் என மட்பாண்டத் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# இந்திய அரசால் வழங்கப்படும் நிவாரணப் பொதிகளின் இரண்டாம்கட்ட உதவிகள் யாழில்





(யாழ். நிருபர்)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் வாழ்வாதார நிவாரண உதவிப் பொதிகளின் இரண்டாம் கட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். புகையிரத நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் வாழ்வாதார உதவிப்பொதிகளை வழங்குவதற்காக பிரதம அதிதியாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் மற்றும் யாழ். இந்திய உதவித் தூதரக அதிகாரி மேனன் ஜீவன்குமார் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு பொதிகளை கொண்டுசெல்லுவதற்கான வாகனங்களில் ஏற்றிவைத்தனர். இதன்போது 04 இலட்சத்து 50ஆயிரம் கிலோகிராம் அரிசிப் பொதிகளும் பால்மாவும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இதில் 11 பிரதேச செயலாளர்கள் பிரிவில் 40ஆயிரம் பேருக்கு இரண்டாம் கட்ட பொதிகளாக வழங்கப்படுகின்றது.

# கோண்டாவிலில் பாரவூர்தியை உடைத்து பொருட்களை திருடிய ஒருவர் கைது

## மற்றொருவருக்கு வலைவீச்சு!



(யாழ். நிருபர்)

கோண்டாவிலில் களஞ்சிய வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பாரவூர்தியை உடைத்து சுமார் 11 இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களை நேற்று முன்தினம் திருடிய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் மற்றொருவர் தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.
திருடிய இலத்திரனியல் பொருட்களை நேற்று முன்தினம் விற்பனை செய்தபோது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

திருநெல்வேலியில் அமைந்துள்ள இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையத்தின் களஞ்சியம் கோண்டாவிலில் உள்ளது.

கடந்த மாதம் வர்த்தக நிலையத்துக்கு எடுத்துவருவதற்காக பாரவூர்தியில் பொருட்கள் ஏற்றப்பட்ட நிலையில் டீசல் இல்லாமை காரணமாக தரித்துவிடப்பட்டிருந்தது. அதன் போதே இரவுவேளை பாரவூர்தி உடைக்கப்பட்டு சுமார் 11 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் வர்த்தகரினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதுதொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் கோப்பாய் பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கோண்டாவிலைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இருவரே இந்த திருட்டை மேற்கொண்டுள்ளனர். அவர்களில் ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக 04 வழக்குகளில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் நீண்ட நாட்களின் பின்னர் டீசல் - மண்ணெண்ணெய் விநியோகம்





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் நீண்ட நாட்களின் பின்னர் நேற்று (09) காலைமுதல் வாகனங்களுக்கான டீசல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

நீண்ட நாட்களாக மன்னாரிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு டீசல் எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை. இதனால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

மேலும், தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவரும் பஸ்களுக்கும் டீசல் இல்லாமையினால் பஸ் உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வந்தனர்.

இந்நிலையில், மன்னார் நகர்ப் பகுதியிலுள்ள இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நேற்று முன்தினம் முதல் வாகனங்களுக்கான டீசல் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் மன்னார், பள்ளிமுனை பிரதான வீதியிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் காலை முதல் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. குடும்ப அட்டை பரிசீலிக்கப்பட்டு 500 ரூபாவிற்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. மேலும் பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருடப்பட்ட மாற்றுத்திறனாளியின் முச்சக்கரவண்டி மீட்பு

(யாழ். நிருபர்)

யாழில் மாற்றுத்திறனாளி ஒருவரின் முச்சக்கரவண்டியை திருடிய குற்றச்சாட்டில் அண்மையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட முச்சக்கரவண்டியும் மீட்கப்பட்டுள்ளது. குறித்த முச்சக்கரவண்டி உரிமையாளர் ஒரு மாற்றுத்திறனாளியாவார். அவர் முச்சக்கரவண்டி ஓட்டுவதன் ஊடாக பெறும் வருமானமே அவரது குடும்ப வாழ்வாதாரமாகும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பின் வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி கடந்த மே மாதம் திருடப்பட்டது.

இந்நிலையில், பருத்தித்துறை பொலிஸாருக்கு கடந்த புதன்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞனை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், வைத்தியசாலை பின் வீதியில் திருடப்பட்ட முச்சக்கரவண்டி அதன் இலக்கத்தகட்டை மாற்றி பாவித்து வந்தமையை கண்டறிந்து அதனை மீட்டனர்.

குறித்த நபர் யாழில் இடம்பெற்ற வேறு சில முச்சக்கரவண்டி திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தில் பொலிஸார் சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# லண்டனில் மலையக இலக்கிய மாநாடு




(கினிகத்தேனை நிருபர்)

மலையக இலக்கிய மாநாடு நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை லண்டனில் முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதன்போது 23 மலையக நூல்கள் அறிமுகம் செய்யப்படவுள்ள அதேவேளை, மெய்வெளி நாடக அரங்கிற்காக சாம் பிரதீபன் தயாரித்தளிக்கும் 'காத்தாயி காதை' என்ற நாடகம் இம்மாநாட்டில் அரங்கேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், லண்டன், நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து 25 உரைஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மஸ்கெலியாவில் மண்ணெண்ணெய் கோரி வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்







(க.கிஷாந்தன், செ.தி.பெருமாள்)

மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரி மஸ்கெலியா எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக மஸ்கெலியா பிரதேச மக்கள் நேற்று(09) பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கடந்த மூன்று கிழமையாக மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மண்ணெண்ணெய் கிடைக்கும் என மக்கள் எதிர்பார்ப்புடன் நேற்று வருகைதந்த நிலையில், அன்றைய தினமும் மண்ணெண்ணெய் வரவில்லை என எரிபொருள் நிலைய ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, ஆத்திரமடைந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு முறையான முறைமையை ஏற்படுத்தக்கோரி மண்ணெண்ணெய்க்காக வரிசையில் காத்திருந்த சுமார் 500இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் காரணமாக போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்திருந்தது. குறிப்பாக, மஸ்கெலியா – ஹட்டன், மஸ்கெலியா – நல்லதண்ணி போன்ற பிரதான வீதியினூடான போக்குவரத்து பல மணி நேரம் தடைபட்டிருந்தது. இதனால் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருந்தனர்.

இதனையடுத்து, நாளை(இன்று 10ஆம் திகதி) அல்லது எதிர்வரும் நாட்களில் அனைவருக்கும் மண்ணெண்ணெய் கிடைக்க தாங்கள் ஏற்பாடுகளை செய்து தருவதாக எரிபொருள் நிலைய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வீதியை புனரமைத்து தரக்கோரிக்கை



பதுளை- ஸ்பிரிங்வெளி ஊடாக தெமோதரை வரையான வீதி, காபட் இடப்பட்டு புனரமைப்பு செய்யும் பணிகள், கடந்த 3 வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், தற்போது அத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் குறித்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் மற்றும் சாரதிகள் பெரிதும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளனர்.

இரவு நேரங்களில் இந்த வீதியில் கவனமாக பயணிக்குமாறு அறிவிப்புப் பலகைகள் தொங்கவிடப்பட்டிருந்த நிலையில், இரவில் அந்த அறிவிப்புப் பலகைகள் காட்சிப்படுத்தும் அளவுக்கு ஒளி விளக்குகள் பொருத்தப்படாமை காரணமாக இப்பகுதியில் இரவில் விபத்துகள் பதிவாவதாகவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.







பதுளை எப்.ஐ.ஓ.எச் (FIOH) நிறுவனத்தினால் நீர் முகாமைத்துவம், மக்களது சுகாதாரம் உள்ளிட்ட ஆரோக்கிய வாழ்வு தொடர்பாக, பெருந்தோட்ட, கிராம சமூக மேம்பாட்டாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று பதுளை 'ரிவர்சைட்' விடுதியில் நேற்று(09) இடம்பெற்றது. இதன்போது சமூக மேம்பாட்டாளர்கள் மற்றும் வளவாளர்கள் கலந்துகொண்டிருப்பதை படங்களில் காணலாம். (படங்கள்: பதுளை நிருபர்)

# பாடசாலை புத்தகப் பை தயாரிக்கும் வீட்டில் தீ விபத்து



(உக்குவளை நிருபர்)

உக்குவளை மாருகொனயில் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகள் தயாரிக்கும் வீடொன்றின் மேல்மாடியில் நேற்று முன்தினம்(08) காலை 10 மணியளவில் திடீர் தீ விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டின் மேல்மாடியில் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பைகள் தயாரிக்க தேவையான பொருட்களை களஞ்சியப்படுத்தும் அறையிலேயே இத்தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

தீ ஏற்பட்டபோது ஒருவித கருகிய வாசனையுடன் கூடிய சிறியசிறிய வெடிப்புச் சத்தங்களைக் கேட்டு சென்று பார்த்த வீட்டார் அயலவர்களுடன் இணைந்து தீயை அணைக்க முற்பட்டனர்.

எனினும், இத் தீ விபத்தினால் புத்தகப்பைகள் தயாரிக்கத் தேவையான பொருட்களுடன் வீட்டின் கூரைப்பகுதியும் எரிந்ததன் விளைவாக, சுமார் 15 இலட்சம் ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். இதனால் எவருக்கும் எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை. மேலும், மின்சார ஒழுக்கினால் இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

# இளைஞர்களின் கனவை கலைத்துவிட்டு எம்.பிக்களுக்கு புதிய வீடு எதற்காக?

## நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சபையில் கேள்வி



மாதாந்தம் 50 ஆயிரம் சம்பளம் பெறும் பட்டதாரி இளைஞர்களின் வீடு கட்டும் கனவை கலைத்துவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய வீடு எதற்கு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இதன்போது அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், வடக்கு கிழக்கினை பொறுத்தவரையில் 30 வருட யுத்தம் காரணமாக வீடுகளை இழந்து, வீடுகள் இல்லாமல் ஆக்கப்பட்டு, அழிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசம். அந்த வகையிலேயே கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் பாரிய வீடமைப்பு வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும், தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி காலத்தில் அந்த வீடுகள் இதுவரை முடித்துக்கொடுக்கப்படாமல் உள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை, தாம் பூர்த்தி செய்யமுடியாது என அரசாங்கத்தின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே வடக்கு, கிழக்கில் நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இதற்கு பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தை காட்டிலும் தற்போதைய அரசாங்கம் கடன் அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட சாணக்கியன், இந்த வீடுகளுக்கு ஒரு இலட்சம் ரூபா மாத்திரமே கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனைக் கொண்டு வீடுகளை அமைக்கமுடியுமா? எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வீடமைப்புத்துறை முன்னாள் பிரதியமைச்சர், குறித்த வீடுகளுக்கு 6 இலட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

எனினும், வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் பொய்யானவை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலுள்ளவர்கள் வீடமைப்பு சார்ந்த விடயங்களில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாடசாலை உபகரணங்களின் விலைகள் சடுதியாக உயர்வு

(தலவாக்கலை நிருபர்)



பாடசாலை உபகரணங்களின் விலை உயர்வால் குறைந்த வருமானம் பெறும் மற்றும் மலையக தோட்டத் தொழிலாளர்கள் தங்களது பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புத்தகப் பை, காலணிகள், பயிற்சி புத்தகங்கள், பென்சில், பேனா, ரப்பர், அப்பியாசக் கொப்பிகள், கலர் பென்சில் உள்ளிட்ட அனைத்து பள்ளி உபகரணங்களின் விலையும் கடந்த ஆண்டை விட இவ்வருடம் பல மடங்கு உயர்ந்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலைகளுக்கு பாடசாலை உபகரணங்களை விநியோகிப்பதற்கு போக்குவரத்திற்கு அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. அதேபோல உபகரணங்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளன என விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது பாடசாலைக்கு பாடசாலை உபகரணங்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றபோதிலும் வருமானம் அதிகரிக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

பள்ளிக் குழந்தைகளுக்கான ஒரு ஜோடி காலணி 1,200 ரூபாவிலிருந்து 3,500 ரூபாவரையும், பள்ளிப் பை 1,000 ரூபாவிலிருந்து 3,000 ரூபா வரையும் ஒரு ஜோடி ரப்பர் செருப்பு 200 ரூபாவில் இருந்து 700 ரூபாவரையும் விலை உயர்ந்துள்ளது.

உபகரணங்களின் விலைகளை ஏழை அப்பாவி மக்களால் சுமக்க முடியாது என மலையக தோட்டப் பகுதிகளிலுள்ள பாடசாலை உபகரண விற்பனை முகவர்கள் தெரிவிக்கின்றனர். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பாடசாலை உபகரணங்களை பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் ஓரளவு நிவாரணம் வழங்குமாறு மலையக தோட்டங்களிலுள்ள பெற்றோர்கள் மேலும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பில் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

## தப்பியோடிய நால்வர் கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ள புதூர் பிரதேசத்தில் கடந்த 20ஆம் திகதி துவிச்சக்கரவண்டியில் சென்ற சேத்துக்குடாவை சேர்ந்த ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பியோடிய நான்கு பேரை நேற்று வியாழக்கிழமை (09) கைது செய்துள்ளதுடன் வாள் ஒன்றை மீட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் சம்பவதினமான கடந்த மே மாதம் 20ஆம் திகதி துவிச்சக்கரவண்டியில் சென்ற ஒருவரை பழைய பகை காரணமாக அவரை மறித்து அவர் மீது 06 பேர் கொண்ட குழுவினர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தினர். இதில் அவர் படுகாயமடைந்ததையடுத்து, தாக்குதலை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பியோடி தலைமறைவாகினர்.

இதனையடுத்து, இத்தாக்குதலில் படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் தலைமறைவாகியிருந்த 22, 35, 45, 40 வயதுடைய நான்குபேரை நேற்று கைது செய்ததுடன் வாள் ஒன்றை மீட்டனர். இவ்வாறு கைது செய்தவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதில் தலைமறைவாகியுள்ள இருவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பாகிஸ்தான் தூதரகத்தின் அனுசரணையில் உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு







(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகத்தின் அனுசரணையில் முஸ்லிம் உரிமைகளுக்கான கூட்டமைப்பின் ஏற்பாட்டில் உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு மாளிகாவத்தை பிரதிபா மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது பொருளாதார, வருமானம் குறைந்த சகல சமூகங்களையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட சுமார் 200 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. முஸ்லிம் உரிமைகள் கூட்டமைப்பின் செயலாளர் எம்.ரூமி ஆமித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநகர சபை உறுப்பினர் ஐ.ஏ.கலீலூர் ரஹ்மான் மற்றும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் உரிமைகளுக்கான கூட்டமைப்பின் செயலாளர் எம்.ரூமி ஆமித் வரவேற்புரையை நிகழ்த்தியதுடன் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாருக் புர்கி உரையாற்றினார்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாருக் புர்கி உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.



இதேவேளை, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தமைக்காக நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.







இந்தியா, சீனா, மத்திய கிழக்கு நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நேற்று (09) நடைபெற்றது. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, சமூக, அரசியல் நிலைமை தொடர்பில் இதன்போது ஜனாதிபதியால் விளக்கம் அளிக்கப்பட்டதுடன் நெருக்கடி நிலைமையிலிருந்து மீள்வதற்கு உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### நாடு முழுவதும் திருட்டுச் சம்பவங்கள்

# அவதானமாக இருக்குமாறு பொலிஸார் வேண்டுகோள்

(தலவாக்கலை நிருபர்)

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து மோசமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒவ்வொரு பகுதிகளிலும் பொலிஸார் ஒலிபெருக்கி ஊடாக பொதுமக்களை எச்சரிப்பதற்கான நடவடிக்கைகளை தற்பொழுது மேற்கொண்டுள்ளனர். அதற்கமைய வீடுகளில் இருக்கும் மக்கள் கதவு, ஜன்னல்களை பூட்டிவிட்டு வீட்டிற்குள் அவதானமாக இருக்குமாறும் அத்துடன் வாகனங்கள் தொடர்பிலும் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிநபர்களை வீடுகளுக்குள் அனுமதிக்க வேண்டாம். உதவி கேட்டு, மின்சாரத் தடை தொடர்பில், அல்லது அதிகாரிகள் எனக் கூறி வீடுகளுக்கு வரும் நபர்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் நகைகள் அல்லது பெறுமதியான பொருட்களுடன் வெளியே நடமாடுவதை தவிர்க்க வேண்டும். இரவு நேரத்தில் வீடுகளின் பாதுகாப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள்.

கையடக்கத் தொலைபேசியின்EMI இலக்கத்தை பதிவு செய்து வைத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டில் இருந்து வந்த நபர்கள் அவதானமாக இருங்கள். உங்களுக்கு பெறுமதியான பரிசு வெளிநாட்டில் இருந்து வந்துள்ளதாக கூறி வரும் நபர்களை வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம். பஸ்களில் புதிய நபர்கள் பழக்கம் ஏற்படுத்த முயற்சித்தால் அதனை தவிர்த்துக் கொள்ளுங்கள். மேலும் பயணத்தின்போது பைகள் வழங்கினால் பெற்றுக் கொள்வதனை தவிர்த்து அவதானமாக இருங்கள். நீங்கள் ஏமாற்றப்படலாம், ஏமாற்றுக்காரர்களினால் குறி வைக்கப்படலாம் என பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.





ஹட்டன் நகர எரிபொருள் நிலையத்துக்கு ஐந்து நாட்களின் பின்னர் நேற்று (09) எரிபொருள் கிடைத்ததையடுத்து, அதனைப் பெற்றுக்கொள்வதற்காக சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: மனுர சுதத் செல்லஹேவா)


திகதி 07.06.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4779
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,353,260.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 8 2 6 4 0 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,835,442.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1257
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,779,800.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 2 7 8 1 5 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,616,772.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3021
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,388,000.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 47 53 68 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,363,609.76

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 809
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,409,380.00
வெற்றி இலக்கினம் L வெற்றி இலக்கங்கள் 18 22 65 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,435,690.80

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0088
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,967,120.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 15 24 36 52
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,750,783.80

கோடி 25 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1127
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,920,220.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 255,015,002.00
E 02 01 04 53 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# மருதமுனையில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த அரிசி நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளால் விற்பனை

(அம்பாறை நிருபர்)

பதுக்கிவைக்கப்பட்டுள்ள அரிசி தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு பழைய விலைக்கு பொதுமக்களுக்கு அரிசியை பெற்றுக்கொடுத்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை பகுதியில் அரிசி பதுக்கல் இடம்பெறுவதாக நேற்று (09) நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைய அவ்விடத்திற்கு சென்ற நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் குழு, அரிசி பதுக்கல் இடம்பெற்றதாக அடையாளம் காணப்பட்ட கடைக்குச் சென்று விசாரணை மேற்கொண்டதுடன், பழைய விலைக்கு அரிசியை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

மேலும், மருதமுனை பகுதியில் குறித்த





கடையில் பொதுமக்களே உடனே விரையுங்கள். குறைந்த விலையில் அரிசியை பெறுங்கள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளும் உள்ளனர் என அப்பகுதியிலுள்ள அந்நூர் பள்ளிவாசலின் ஒலிபெருக்கியிலும் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு அதிகளவான மக்கள் வருகைதந்து அரிசியை கொள்வனவுசெய்து சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, இவ்வாறான அரிசி பதுக்கல் செயற்பாட்டை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் முறியடிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சுட்டுக்கொல்லப்பட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சந்திரா பெர்னாண்டோவின் 34ஆவது நினைவு தினம்

## மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் 34ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று (09) மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06ஆம் திகதி இந்திய இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக்குழு ஒன்றினால் மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் வைத்து அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ சுட்டுக்கொல்லப்பட்டார்.

அன்னாரது சமாதியானது புனித மரியாள் பேராலயத்தில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அதில் நேற்று (09) நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும் எகட்



ஹரிதாஸின் அனுசரணையுடனும் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் தலைவர் அருட்தந்தை ஜெகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருட்தந்தை எ.தேவதாசன் அடிகளார் மற்றும் எகட் ஹரிதாஸின் இயக்குனர் அருட்தந்தை ஏ.ஜேசுதாசன் மற்றும் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் சகோதரர்கள், உறவினர்கள், பல்சமய ஒன்றிய பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு, ஈகச்சுடர் ஏற்றப்பட்டு சமாதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் இலக்கு நோக்கி பயணிக்க ஆரம்பித்த காலத்தில், ஆக்கிரமிப்புப் படையினரால் மக்கள் அழிக்கப்பட்டார்கள், சுற்றிவளைப்புகள், கைதுசெய்து விசாரணையின்றி அடைத்து வைத்தல் போன்ற மக்களின் பல்வேறு துன்ப துயரங்களுக்கு துணிந்து களமிறங்கி சேவைசெய்த அருட்தந்தை சந்திரா, தமிழ்த் தேசிய விடுதலையை உள்ளுணர்வோடு நேசித்ததனால் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஏற்றுக்கொண்டவராக காணப்பட்டார்.

அதனால் மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட மக்கள் அமைப்பு பலம்பொருந்தியதாகவும், அனைத்து விடயங்களிலும் தகைமைசார் செயற்பாட்டாளர்களை கொண்டிருந்ததற்கும் வணபிதா சந்திரா, அதிபர் வணசிங்க போன்ற தன்னலமற்ற உன்னத மனிதர்களின் செயற்பாடுகளே காரணமென போற்றப்படுகின்றது.

# அக்கரைப்பற்று பனங்காடு பட்டிநகர் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி பூரணை திருக்குளிர்த்தி சடங்கு



(ஆலையடிவேம்பு நிருபர்)

கண்ணகி வழிபாட்டிற்கு பிரசித்திபெற்ற இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பனங்காடு பட்டிநகரில் குடிகொண்டுள்ள கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி பூரணை திருக்குளிர்த்தி சடங்கு இம்மாதம் 14ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கண்ணகி வரலாற்றுடன் தொடர்புடைய கண்டிய மன்னின் மானியம் பெற்றதும் பொற்புறா வந்த காவியம் பாடப்பட்டதுமான இவ்வாலயத்தின் திருக்குளிர்ச்சி இன்று 10ஆம் திகதி இடம்பெறும் திருக்கதவு திறக்கும் வழிபாடுகளுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12ஆம் திகதிவரை நடைபெறும் விசேட அபிஷேக மூன்றுகால பூஜைகளுடன் இடம்பெற்று 13ஆம் திகதி இரவு இடம்பெறும் கல்யாணக்கால் நடும் நிகழ்வுடனும் 14ஆம் திகதி இடம்பெறும் திருக்குளிர்த்தி மற்றும் பக்தர்களின் நேர் கடன் பொங்கல் 15 நடைபெறும். கவடாப்பிட்டி பிள்ளையார் ஆலய பொங்கல் மற்றும் ஐயனார், வைரவர், நாகேஸ்வரர் பூஜையுடனும் நிறைவுறும்.

இதேநேரம் 10ஆம் திகதி காலை பனங்காடு கேணிக்கரை பிள்ளையார் ஆலய தரிசனத்துடன் அக்கரைப்பற்று பிரதேச இந்து ஆலயங்களின் பரிபாலன சபை உறுப்பினர்களின் வருகையைத் தொடர்ந்து வண்ணக்கர் க.கார்த்திகேசு தலைமையில் பாசுபதேசுரர் தேவஸ்தான தரிசனம் செய்து பூஜா திரவியங்களுடன் அம்மன் பதி அடைந்து நண்பகல் 12 மணியளவில் திருக்கதவு திறக்கப்படும்.

திருக்கதவு திறக்கும் வழிபாடுகளில் கலந்து கொள்ளும் பக்தர்கள் நன்மை கருதி இன்று காலை 10 மணிக்கு ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் முன்பாக இருந்து பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள் ஆலய நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் ஆலயத்திலிருந்து அக்கரைப்பற்றை நோக்கி பஸ் புறப்படும் எனவும் ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத் தலைவர் வண்ணக்கர் க.கார்த்திகேசு தலைமையில் இடம்பெறும் திருக்குளிர்ச்சி வழிபாடுகளை ஆலய பூசகர் கு.ரவீந்திரநாதன் தலைமையிலான பூசகர்கள் நடத்திவைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹொரவப்பொத்தானையில் கெப் வாகனம் விபத்து; பெண்ணொருவர் உயிரிழப்பு – எண்மர் படுகாயம்

(அப்துல்சலாம் யாசீம்)

ஹொரவப்பொத்தானை பிரதான வீதி கஹடகஸ்திகிலிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (08) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் ஹொரவப்பொத்தானை, முக்கறவெவ பகுதியைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

கெப் வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சிறார்கள் உட்பட 8 பேர் காயமடைந்த நிலையில், அநுராதபுர போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்நிலையில், குறித்த பெண் நேற்று முன்தினம் (08) காலை உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் தற்போது அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் கஹடகஸ்திகிலிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

### தென்கிழக்குப் பல்கலையில் இதழியல்துறை

# டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2017/18ஆம் ஆண்டுக்கான இதழியல் டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி காலை 08.30 மணிக்கு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கற்கைநெறியானது ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல், பல்கலைக்கழக சிற்றூழியர்கள் வேலைநிறுத்தம், கொரோனா போன்ற காரணங்களால் சில காலங்கள் தாமதமானதுடன், மிகச் சிரமங்களுக்கு மத்தியில் கடந்த வருடம் இதற்கான இறுதிப் பரீட்சை இடம்பெற்றது. இதில் 42 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வே இவ்வாறு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தகைசார் விரிவுரையாளரும் பேராசிரியருமான கலாநிதி எஸ்.சண்முகதாஸ் கலந்துகொண்டு பிரதான உரையாற்றவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழிவளத்துறை தலைவரும், இதழியல் கற்கைநெறியின் இணைப்பாளருமான பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்ப தலைமைப் பேராசிரியரும், வெளிவாரி கற்கை நிலையத்தின் பணிப்பாளருமான பேராசிரியர் எம். எச்.தௌபீக் உள்ளிட்ட இக்கற்கைநெறியின் அனைத்து வளவாளர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# மட்டு. மாவட்டத்தில் 80 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சேதனப் பசளை மூலம் சுமார் 80 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக வேளாண்மை செய்கைபண்ணப்பட்டிருப்பதாக அகில இலங்கை விவசாய சம்மேளத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கே.யோகவேல் தெரிவித்தார்.

சேதனப் பசளையை நம்பி செய்கை பண்ணப்பட்டுள்ள சிறுபோக வேளாண்மை நல்ல விளைச்சலைத் தந்துள்ளதாகவும் இரசாயன உரம் கிடைக்கும் பட்சத்தில் மேலும் நல்ல அறுவடையை எதிர்பார்க்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

அகில இலங்கை விவசாய சம்மேளனம் அண்மையில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் நடத்திய பேச்சு வார்த்தையின்போது இம்மாத இறுதிக்குள் இந்தியாவிலிருந்து இரசாயன பசளையை இறக்குமதி செய்து தருவதாகவும் உறுதியளித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

சேதனப் பசளை மூலம் செய்கைபண்ணப்பட்ட வேளாண்மையை அறுவடை செய்யும்போது ஒரு ஏக்கருக்கு 10 மூடை அறுவடையை எதிர்பார்த்தால் இரசாயனப் பசளை மூலம் செய்கைபண்ணப்படும் நெற்செய்கைக்கு ஒரு ஏக்கருக்கு 35 மூடைகளை அறுவடையாக எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தம்பலகாமத்தில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு எண்ணெய் பிரிக்கும் இயந்திரம் வழங்கிவைப்பு





(கிண்ணியா நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட பகுதியில் கைத்தொழிலில் ஈடுபடுபவர்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு எண்ணெய் பிரிக்கும் இயந்திரம் நேற்று (09) பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டது.

பிரம்புகள், பித்தளை மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள திட்டம் ஊடாக குறித்த இயந்திரங்கள் வழகப்பட்டன. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து அதனை வெற்றிகொள்வதற்கான ஒரு வாய்ப்பாக அமைய இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க சுயதொழிலை முன்னேற்றமடையச்செய்து ஊக்குவிக்க இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், கணக்காளர் செல்வதாஸ், விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.ஆர்.எம்.நபீல் ஆகியோர்கள் கலந்துகொண்டு இதனை வழங்கினர்.

# மூடப்பட்டிருந்த ஆலங்குளம் வைத்தியசாலை மீண்டும் திறப்பு





(சாய்ந்தமருது நிருபர்)



கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ள ஆலங்குளம் ஆரம்ப வைத்தியசாலை நேற்று (09) திறந்துவைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவிலுள்ள இவ்வைத்தியசாலை 1994ஆம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டதாகும். கடந்த சில வருடங்களாக புனரமைப்பின்றி காணப்பட்ட இவ்வைத்தியசாலையின் கட்டடம், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை எடுத்துக் கொண்ட அயராத முயற்சி காரணமாக சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் அனைத்து மீள் நிர்மாணமும் செய்யப்பட்டு, மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.முபாரிஸ் தலைமையில் இடம்பெற்ற இதன் திறப்பு விழாவில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வைத்தியசாலையின் சேவைகளை ஆரம்பித்துவைத்தார்.

அத்துடன் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.ஐ.எம்.தௌபீக், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.எம்.வாஜித், திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர், மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வி.ரி.சர்மா, பொறியியலாளர் எம்.எம்.எம்.ஹக்கீம் உள்ளிட்டோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இவ்வைத்தியசாலையினால் முன்னெடுக்கப்பட வேண்டிய சேவைகள், அதற்காக ஏற்படுத்தப்பட வேண்டிய மேலதிக வசதிகள், எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடலும் இடம்பெற்றது.







ஜனாதிபதி கோட்டாபயவின் எண்ணத்தில் உருவான பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜனின் வழிகட்டலின் கீழ் காரைதீவு பிரதேச பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கான நியமனக்கடிதங்கள் அண்மையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (படங்கள் – மாளிகைக்காடு நிருபர்)

# இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகளை வழங்குவதில் பாரபட்சம்

## கந்தளாயில் கிராமசேவகரை இடமாற்றுமாறு மக்கள் கோரிக்கை





(கந்தளாய் நிருபர்)

கந்தளாயில் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உணவுப் பொதிகளை விநியோகிப்பதில் பாரபட்சம் காட்டுவதாகவும், கிராம சேவகரை இடமாற்றுமாறும் பொதுமக்கள் நேற்று முன்தினம் (08) எதிர்ப்பை வெளியிட்டார்கள்.

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கோவில் கிராமத்தில் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உலருணவுப் பொதிகளை பெற்றுக்கொள்ள மாட்டோம் என அப்பகுதி மக்கள் எதிர்ப்புக் கோஷங்களில் ஈடுபட்டார்கள்.

கோவில் கிராமம் பகுதிக்குப் பொறுப்பான கிராம அதிகாரி தனக்கு தேவையானவர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் மாத்திரமே பெயர்ப்பட்டியலை தயாரித்து இந்திய அரசின் உலருணவுப் பொதிகளை வழங்கி வருகின்றார்.

இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் வழங்கவே இந்தியா நிவாரணங்களை வழங்குகின்றது. ஆனால், இங்கே அது நடைபெறுவது இல்லை. சமுர்த்தி பெறுபவர்களுக்கும் ஏனையோருக்கும் வழங்கப்படுகின்றது. அப்பகுதி கிராம அதிகாரியை மாற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அம்பாறை பள்ளக்காட்டில் யானைத் தாக்குதலில் ஆறுமாத ஆண்குழந்தையொன்று உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பள்ளக்காடு பிரதேசத்தில் யானை தாக்குதலினால் 6 மாத ஆண்குழந்தை ஒன்று நேற்று முன்தினம் (08) உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த 6 மாத சுதர்சன் சதுர்சன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் குடும்பமான கணவன் - மனைவி அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் மாட்டுப்பட்டி மாடுகளை பராமரிக்கும் வேலையை பள்ளக்காடு பிரதேசத்தில் தங்கியிருந்து வேலை செய்துவரும் நிலையில், சம்பவதினத்தன்று மாலை 5 மணியளவில் அந்த பகுதியிலுள்ள மரத்தின்கீழ் பாயில் குழந்தையை படுக்க வைத்துவிட்டு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது திடீரென அங்கு வந்த யானை மரத்தின்கீழ் படுத்திருந்த குழந்தையை தாக்கியதையடுத்து குழந்தை சம்பவ இடத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இதனையடுத்து உயிரிழந்த குழந்தையை அங்கிருந்து மீட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் இலங்கைக்கான குவைத் தூதுவர் சந்திப்பு







(கல்முனை நிருபர்)

கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், இலங்கைக்கான குவைத் தூதுவர் ஹலாஃப்பு தாய்ரை கொழும்பிலுள்ள தூதரகத்தில் நேற்று முன்தினம் (08) சந்தித்து கலந்துரையாடிய பின்னர், கல்முனைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

நாட்டில் நிலவும் சமகாலப் பிரச்சினைகள், கல்முனைப் பிரதேசத்திலுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்த பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், தனது பிராந்தியத்துக்கு உதவிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

தன்னால் இயலுமான அனைத்து உதவிகளையும் செய்துதருவதாக தூதுவர் இதன்போது உறுதியளித்தார்.

அத்துடன், குடுவில் குடியேற்றத் திட்டத்தில் 40 வீடுகளை அமைப்பதற்கு உதவி கோரப்பட்டபோது, குவைத் அரசாங்கத்தின் நிதியுதவியில் அதனை நிர்மாணித்து தருவதாக இதன்போது உறுதியளிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சரும் குவைத், பஹ்ரைன் நாடுகளின் முன்னாள் தூதுவருமான தனது தந்தை ஏ.ஆர்.மன்சூரின் பெயரில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 900 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஞாபகார்த்த மண்டபம், கல்முனை முஹையத்தீன் ஜும்ஆ பள்ளிவாசல் உள்ளிட்ட பல அபிவிருத்திப் பணிகளுக்கு குவைத் அரசாங்கம் நிதியுதவி வழங்கியதை நினைவுகூர்ந்து, பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் இதன்போது நன்றி பாராட்டினார்.

இதன்போது, தனது நினைவுப்பேழையில் வைத்திருந்த ஏ.ஆர்.மன்சூருடனான புகைப்படத்தை காண்பித்து இருவருக்குமிடையிலான தொடர்புகளை சிலாகித்துப் பேசிய தூதுவர், அப்போதைய நெகிழ்ச்சியான தருணங்களையும் இதன்போது பகிர்ந்துகொண்டார்.

அத்துடன், காலஞ்சென்ற முன்னாள் தூதுவரான அப்துல்லாஹ் நஸீர் (2002-2005) ஞாபகார்த்த நினைவேட்டில் ரஹ்மத் மன்சூர் தனது குறிப்புகளை பதிவுசெய்தார். இச்சந்திப்பில் குவைத் தூதரகத்தின் சமூக, நலன்புரி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் முஹம்மட் பிர்தௌஸும் கலந்துகொண்டார்.

# நாவிதன்வெளி சமுர்த்தி வங்கியில் இணையவழி துரித சேவை ஆரம்பிப்பு





(பெரியநீலாவணை நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நாவிதன்வெளி சமுர்த்தி வங்கியில் பொதுமக்களுக்கான ஒன்லைன் துரித சேவைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (08) வங்கி முகாமையாளர் சட்டத்தரணி எம்.எம்.முபீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், சமுர்த்தி திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டு ஒன்லைன் சேவை ஊடாக பொதுமக்களுக்கான வங்கி கொடுக்கல் வாங்கலை ஆரம்பித்துவைத்தனர்.

பொதுமக்கள் தமது துரிதமான சேவையை பெற்றுக்கொள்ளும் நோக்கோடு நாட்டிலுள்ள சமுர்த்தி வங்கிகளில் ஒன்லைன் இணையவழி ஊடாக துரித சேவையை பெற்றுக்கொள்ளும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது வங்கிகளில் இச்சேவை வழங்கப்பட்டு வருகின்றது. நாவிதன்வெளி சமுர்த்தி வங்கியில் இந்த வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதையடுத்து சமுர்த்தி பயனாளிகள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமையிட முகாமையாளர் எஸ்.சிவம், முகாமையாளர் ஏ.சித்தி நஜீமா, திட்ட முகாமையாளர் எம்.தமிழ்வாணன், மேற்பார்வை உத்தியோகத்தர் களான ரீ.தெய்வேந்திரன், ஐ.எம்.ஹனிபா, எம்.நாசர், சமுர்த்தி மகா சங்கத் தலைவர் கே.பிரசன்னா உட்பட பிரதேச மட்ட சமுர்த்தி சங்கங்களின் தலைவர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



கதயால காலத்த கடத்தும் பிரதமரும், வாயால வடைசுடும் ஜனாதிபதியும், உதவாக்கரை எதிர்க்கட்சித் தலைவரும், ஆமாசாமி போடும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ள நம்மட நாட்டில இப்படியே நாலு வருஷத்தையும் கடத்திப்போடுவாங்க. சனங்களுதான் பாவம். இவங்கட கூத்தப்பார்த்து கொட்டாவி விடவேண்டியதுதான். எல்லோருமே பதவி ஆசை. ஒண்டுமே நடக்காது!

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் உயிரியல் மருத்துவப் பொறியியல் பிரிவு திறப்பு





(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் முதற்றடவையாக உயிரியல் மருத்துவப் பொறியியல் பிரிவு திறந்துவைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மருத்துவ உயிரியியல் பொறியியல் பிரிவு எந்திரி.எஸ்.எம்.எ.ஆர்.பண்டார பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அண்மையில் திறந்துவைத்தார்.

விலையுயர்ந்த மருத்துவ உபகரணங்களை உடனடியாகப் பராமரிப்பதற்கும் திருத்துவதற்குமாக முதற்றடவையாக இப்புதிய மருத்துவ உபகரணப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவானது எந்திரி எஸ்.எம்.எ.ஆர்.பண்டாரவின் நேரடிக் கண்காணிப்பில் கீழ் இயங்கும். இதனூடாக அரச செலவீனங்களைக் குறைத்து வினைத்திறனான சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபா இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் ஆகில் அகமட் சரீப்டீன், தர முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.எம்.தாஸிம் மற்றும் மருந்தாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmall.com

# மட்டு. புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவம் - 2022




(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கிலங்கையில் பிரசித்திபெற்ற மிகவும் தொன்மைவாய்ந்த ஆலயங்களில் ஒன்றாக திகழ்ந்துவரும் மட்டக்களப்பு, புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவமானது எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீ மிதிப்பு வைபவத்துடன் ஆலய உற்சவம் இனிதே நிறைவடையவுள்ளது.

திருச்சடங்கு உற்சவக் காலத்தில் தினமும் பகல் பூசைகள் பி.ப. 2.00 மணிக்கும், இரவு பூசைகள் நள்ளிரவு 2.00 மணிக்கும் இடம்பெறுவதுடன், 22ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கல்யாணக்கால் வெட்டும் வைபவம் வீதி வலமாக இடம்பெற்று மறுநாள் 23ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு எரிக்கில வெட்டும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

உற்சவக் கால பூசை வழிபாடுகள் அனைத்தும் ஆலய பூசகர்களினால் நிகழ்த்தப்படவுள்ளதுடன், புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மனின் அருள்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர் ஆலய பரிபாலன சபையினர்.

# திருமலை மாவட்ட செயலக ஊழியர்களுக்கு மரக்கறி விதைப்பொதிகள் வழங்கிவைப்பு







(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கான மரக்கறி விதைப்பொதிகள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை அரசாங்க அதிபர் பீ.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நேற்று முன்தினம் (08) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. அத்துடன், TOMEJC ரக மாங்கன்றுகளும் இதனோடு இணைந்ததாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் மக்களை வீட்டுத்தோட்டம் செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு "பசுமையான ஒரு தேசம்" தேசிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைப்புரட்சி என்ற திட்டத்தின்கீழ் இவை விநியோகிக்கப்பட்டன.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் இந்த விதைப்பொதிகள் விநியோகிக்கப்பட்டன. குறித்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.குகதாசன் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

# மட்டு. மாவட்டத்தில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த கிணறுகளில் இடுவதற்காக மீன்குஞ்சுகள் விநியோகம்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவிவரும் நிலையில், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த ஒரு மாத காலத்தில் இருவர் பலியாகியுள்ளனர். மேலும் 331 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.உதயகுமார் தெரிவித்தார்.

இந்நிலையில், டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு நுளம்புகளை அழிக்கவென கிணறுகளில் மீன்குஞ்சுகளை இடும் நடவடிக்கைகளை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் கூகுள் வலையமைப்பினூடாக கிணறுகளின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. மாமாங்கம் பிரதேசத்திலுள்ள கிணறுகளில் விடுவதற்கான மீன்குஞ்சுகள் நேற்று (09) காலை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.உதயகுமார், மாமாங்கம் பங்குத்தந்தை அருட்தந்தை பிறைனர் செலர், மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் எம்.விஜயகுமார், மாமாங்கம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.கிசாந்தராஜா உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# நாவலப்பிட்டி ஸ்ரீ விஷ்ணு கதிர்காம ஆலய ஊர்வலம் நாளை

நாவலப்பிட்டி பெனிதுடுமுல்ல உத்பலவர்ன ஸ்ரீ விஷ்ணு கதிர்காம தேவாலயத்தின் தேவ ஊர்வலம நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை, இரவு 07 மணிக்கு தேவாலயத்தின் வளாகத்தில் இடம்பெறவிருக்கிறது.

முகமூடி நடனம், நாட்டில் புகழ்பெற்ற தீப்பந்து நடனக்குழுவான ராகமை வல்பொல கலை நிறுவனத்தின் தீப்பந்தம் மற்றும் பொய்க்கால் நடனம், காவடி போன்ற பல்வேறு நடனங்களை உள்ளடக்கியவாறு, தடிமுண்டன், கந்தன் மற்றும் ஸ்ரீ மஹா விஷ்ணு ஆகிய தெய்வங்களின் ஆபரணங்களுடன் இந்தத் தேவ ஊர்வலம இடம்பெறவிருக்கிறது.

அத்துடன் முற்பகல் 11 மணிக்கும் இரவு 08 மணிக்கும் தேவ பூஜை நடைபெறும். பகலும் இரவும் தேவ பூஜையின்போது தனிப்பட்ட பூஜைகள், நேர்த்திகள் மற்றும் சாந்தி பூஜைகள் செய்ய இடமளிக்கப்படும். நாவலப்பிட்டி பெனிதுடுமுல்லையில் வசித்த அமரர் வைத்தியர் எஸ்.எச்.பி. மாறவெல்லவால் (புத்ததாச வைத்தியர்) 1973ஆம் ஆண்டு இத்தேவாலயம் ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முகக்கவசம் அணியாததால் 5,000 ரூபா அபராதம்

மினுவங்கொடையில் பொது இடத்தில் முகக்கவசம் அணியாத நபர் ஒருவருக்கு மினுவங்கொடை நீதவான் நீதிமன்றத்தினால் 5,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

திவுலுபிட்டிய பொலிஸாரால் இந்த நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார். இவர் பொலிஸாருடன் வாக்குவாதப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



## பொருளாதார நெருக்கடி - டொலர் தட்டுப்பாடு - மூலப்பொருள் பற்றாக்குறை

# தொழிற்சாலைகள் பல மூடப்படும் அபாயம்

## 20 இலட்சம் பேர் தொழிலை இழக்கும் நிலை

(நமது விசேட செய்தியாளர்)

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, டொலர் தட்டுப்பாடு, மூலப்பொருள் பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதுடன், சுமார் 20 இலட்சம் பேர் தொழில்வாய்ப்பை இழப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆடைத் தொழிற்சாலைகள், மின்சார உபகரணத் தயாரிப்புத்துறை, பலசரக்கு உற்பத்தி, பேக்கரி உற்பத்தித்துறை ஆகியன இந்த அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

டொலர் பற்றாக்குறை காரணமாக பல்வேறு தொழிற்றுறைகளுக்கு அவசியமான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய வியாபாரிகள் சம்மேளனத்தின் தலைவர் டானியா அபேசுந்தர தெரிவித்துள்ளார். அந்தத் தொழிற்றுறைகளுக்கான மூலப்பொருட்கள் இம்மாதத்துடன் நிறைவடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் 51 வீத பங்களிப்பை வழங்கும் சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறைகளுக்கும் இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளன. டொலர் நெருக்கடி காரணமாக சர்வதேச சந்தையுடனான தொடர்பைப் பேண முடியாமையால் ஆடைத் தொழிற்சாலைகளும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

அவ்வாறு ஆடைத் தொழிற்றுறை பாதிக்கப்படுமானால் அவற்றுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ள மூன்று இலட்சத்து 50 ஆயிரம் பேரும் மறைமுகமாக தொடர்புபட்டுள்ள 10 இலட்சம் பேரும் தொழிலை இழக்கும் நிலைமை ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலுடன் மறைமுக தொடர்பை ஏற்படுத்திக்கொண்டுள்ள சுமார் 20 இலட்சம் பேர் தொழிலை இழக்கும் நிலை உருவாகியுள்ளது.

மின்சார உபகரணங்களை தயாரிக்கும் தொழிற்றுறையினருக்கு மூலப்பொருட்கள் முற்றாக நிறைவடைந்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமை காரணமாக இதுவரைகாலமும் இயங்கிவந்த ஏழாயிரம் பேக்கரிகளில் இரண்டாயிரம் பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, சீமெந்து, இரும்பு உள்ளிட்ட பொருட்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டினால் நிர்மாணத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







பாகிஸ்தான் நாட்டிலிருந்து தேசிய பாதுகாப்பு பல்கழைக்கழக பாதுகாப்பு அதிகாரிகள் 4 நாட்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.கள். அந்நாட்டின் விமானப் படை அதிகாரி அக்தர் இம்ரான் தலைமையிலான குழு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் ஓய்வு உமர் பாருக் புர்க்கியை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார்கள். (அஷ்ரப் ஏ சமத்)

# யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும் யாழ். வர்த்தகத் தொழிற்றுறை மன்றமும் புரிந்துணர்வு உடன்படிக்கை







*யாழ். செய்தியாளர்*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும், யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றமும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் இணைந்துகொண்டுள்ளன. இவ் உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர்கள், விரிவுரையளர்கள் போன்றவர்களுக்கும் பல்வேறு வழிகளில் நன்மையினை ஏற்படுத்தும். இப்புரிந்துணர்வு உடன்படிக்கையின் வாயிலாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமானது யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் நிலைபேறான அபிவிருத்திக்கு பாரியளவில் பங்களிப்பினை வழங்க முடியும்.

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் அங்கத்தவர்களுக்கு தேவையான பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், போன்றன வற்றுக்கு வளவாளர்களாக முகாமைத்துவ வணிக பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் தொழிற்படுதலுடன் கொள்கைகள் மற்றும் செயற்றிட்டங்களை வகுப்பதில் உதவுதல். குறுகியகால டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைகளினை அறிமுகப்படுத்துதலும் அடங்குகின்றன.

இதன் மூலமாக அங்கத்தவர்களின் தொழில்சார் அறிவினை பெருக்கிக்கொள்ள உதவுதல். தொமிற்றுறை நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற நெருக்கடி நிலையினை சிறந்த முறையில் முகாமை செய்வதற்குரிய தந்திரோபாய ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்குதாரர்களாக செயற்படுதல் வணிகத்தின் வளர்ச்சி ஆராய்ச்சிகள் ஆலோசனைகள் முதன்மையான இடத்தினை வகிக்கின்றன. இவ்வாறான ஆலோசனைகள் தேவைப்படும்போது முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் நிபுணர் குழு தேவையான ஆலோசனைகளை வணிக குழாமுக்கு வழங்குவதன் மூலம் தொழிற்றுறையின் செயற்பாட்டினை மேம்படுத்த உதவும்.


அதேபோல் இந்த உடன்படிக்கையின் மூலம் மாணவர் சமூகம் பல்வேறு வழிகளில் நன்மையினை பெற்றுகொள்ள வாய்ப்புகள் உள்ளன. மாணவர்களுக்கு தமது பட்டப்படிப்பின் ஓர் அங்கமாக அமைந்துள்ள உள்ளகப் பயிற்சிக்கான வாய்ப்பினை பெற்றுக்கொள்ளவும். மாணவர்களுக்கு பகுதிநேர வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்தலுக்கு உதவுதல். யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றம் செயற்படுத்தும் செயற்றிட்டங்களில் மாணவர்கள் நேரடியாக பங்குபற்றி பயிற்சிகளை பெற்றுக்கொள்வதன் வழியாக மாணவர்கள் தங்கள் நடைமுறை அறிவினை விருத்தி செய்துகொள்வதுடன் விழிப்புணர்வையும் பெற்றுக்கொள்வர். சில மாணவர்கள் தொழில் முயற்சியாளர்களாக காணப்படுவதனால் இத்தகைய மாணவர்களின் பங்குபற்றுதல், உள்நாட்டு மட்டத்திலும் சர்வதேசே மட்டத்திலும், புதிய உற்பத்திகளுக்கு அங்கீகாரம் பெற வழிசெய்யும். இதனால் மாணவர்கள் தமது உற்பத்திகளுக்கு அதிக சந்தை வாய்ப்புகளைப் பெறுவார்கள்.

மாணவர்களிடையே காணப்படுகின்ற தொழில் முயற்சியாளர்களை யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் அங்கத்தவர்களாக இணைத்துக்கொள்வதுடன் ஆண்டுதோறும் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் நிகழ்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கும் "இளம் தொழில் முயற்சியாளர் தினத்தில்" சிறந்த மாணவர்களுக்கான விருதை வழங்குதல் போன்ற வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றமும் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும் ஒன்றிணைந்து வணிகக் கண்காட்சியினை எதிர்காலத்தில் ஏற்பாடு செய்வதுடன் தொடர்ச்சிய இரு அமைப்புகளும் சேர்ந்து தொழில்முயற்சி பற்றி தொடர்ச்சியான விழிப்புணர்வினை மக்கள் மத்தியிலும் மாணவ சமூகத்துக்கு இடையேயும் ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்தவுள்ளன.

# ஜப்பானின் துணை வெளிவிவகார அமைச்சருடன் இலங்கைத் தூதுவர் சஞ்சீவ் குணசேகர சந்திப்பு

## நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார சவால்கள் குறித்து ஆராய்வு



இலங்கைத் தூதுவர் சஞ்சீவ் குணசேகர கடந்த வாரம் ஜப்பானின் துணை வெளிவிவகார அமைச்சர் ஹோண்டா டாரோவை சந்தித்தார். மேலும் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை, இலங்கை மற்றும் ஜப்பான் இருதரப்பு உறவுகள் தொடர்பான விடயங்கள் என்பன தொடர்பிலும் கலந்துரையாடினார்.

இரு நாட்டுமக்களுக்கும் இடையே உள்ள வலுவான நட்புறவை நினைவுகூர்ந்த துணை அமைச்சர், தூதுவர் தனது பதவிக்காலத்தில் குறிப்பாக, மக்களுக்கிடையே பிணைப்பை ஏற்படுத்துதல், முதலீடுகள் மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துதல், ஜப்பான் அரசாங்கத்தால் இலங்கை மக்களுக்கு கொவிட்-19 தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கியமை தொடர்பான விசேட குறிப்புடன் சுகாதார இராஜதந்திரத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றில் ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டினார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து துணை அமைச்சருக்கு விளக்கமளித்த தூதுவர், இலங்கை மக்கள் மீதான இந்த நெருக்கடியின் சவால்களைத் தணிக்க அரசாங்கத்தின் ஆதரவைக் கோரினார்.

இலங்கை மக்களுக்கான உணவுகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்காக 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மனிதாபிமான உதவிகளை ஜப்பான் அரசாங்கம் நன்கொடையாக வழங்கிய மைக்கு நன்றி தெரிவித்ததோடு, இலங்கையின் தேவைப்படும் நேரத்தில் உதவுவதற்கு ஜப்பான் மற்றும் ஏனைய நன்கொடையாளர்களுக்கு மேலும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குமாறு அழைப்பு விடுத்தார்.

ஜப்பான் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், இந்த பொருளாதார நெருக்கடியால் சாதாரண மக்கள் மீது ஏற்பட்டுள்ள பாதிப்பால் வருத்தப்படுவதாகவும், சர்வதேச நாணய நிதியத்துடனான உரையாடலை விரைவுபடுத்துமாறும், கடனை வெளிப்படையான மற்றும் ஒப்பிடக்கூடிய மறுகட்டமைப்பை நோக்கிச் செல்லுமாறும் துணை அமைச்சர் டாரோ அறிவுறுத்தினார்.

இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் நெருக்கடியான நிலைமை காணப்படுவதாகவும், பொருளாதார நிலைமையை படிப்படியாக மேம்படுத்த புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கம் நிலையான தீர்வைக் கொண்டுவரும் என நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தணிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச பங்காளிகளின் ஆதரவுடன் இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு உட்பட இலங்கையின் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து துணை அமைச்சருக்குத் தூதுவர் குணசேகர தெரிவித்தார்.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டு 70 வருடங்கள் நிறைவடைந்ததைக் குறிப்பிட்ட தூதுவர், தனது பதவிக்காலத்தில் ஜப்பானிய பங்களிப்பின் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு சிறந்த ஆதரவை வழங்கியுள்ளதாகவும், இந்த இக்கட்டான தருணத்தில், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு இலங்கைக்கு இருதரப்பு மற்றும் அதன் நட்பு நாடுகள் மூலம் உதவுவதற்கு ஓர் ஊக்கியாக ஜப்பான் செயற்படும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

# சிங்கராஜ வனப்பகுதிக்குள் சென்ற பெண் வீடு திரும்பவில்லை

## ஆறு நாட்களாக தேடும் பணிகள் முன்னெடுப்பு

கொலன்ன, சூரியகந்த பகுதியில் ஏலம் பறிக்கச் சென்ற பெண்ணொருவரை காணவில்லையென அவரது கணவரால் சூரியகந்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சூரியகந்த காட்டுப்பகுதிக்கு கடந்த 03ஆம் திகதி கணவருடனும் மகனுடனும் அந்தப் பெண் சென்றுள்ளார். அதன்பின்னர் அவர் வழி தவறியிருக்கலாம் என பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரியகந்த ஜீ.ஜீ. பகுதியில் வசிக்கும் 45 வயதான ஐந்து பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு காணாமல்போயுள்ளார். இவரை கண்டறிவதற்காக குருவிட்ட இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரின் உதவி கோரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இராணுவக் குழு சிங்கராஜ காட்டுப்பகுதியில் தேடுதல் மேற்கொண்டுள்ளது.

இந்தப் பெண்ணை தேடும் பணிகள் அப்பகுதி மக்களாலும் பாதுகாப்புத் தரப்பினராலும் ஆறு நாட்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கிழக்கு உக்ரைன் பகுதிகளை கைப்பற்ற தீவிரம் காட்டும் ரஷ்யா

# 400 குழந்தைகள் தங்கியிருந்த பாடசாலை மீது குண்டுவீசி தாக்குதல்



### மரியுபோலில் 2 கட்டடங்களிலிருந்து 100 சடலங்கள் மீட்பு

கிழக்கு உக்ரைனில் சுமார் 400 குழந்தைகள் தஞ்சமடைந்திருந்த பாடசாலையொன்றின் மீது ரஷ்யப் படையினர் குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

டான்பாஸ் பகுதியின் முக்கிய இணைப்பு நகரமாகத் திகழும் பாக்முட்டில் பாடசாலை மற்றும் அதன் நிர்வாகக் கட்டடம் மீது ரஷ்யா குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் உயிர்சேதம் குறித்து தகவல் ஏதும் வெளியிடப்படாத நிலையில், சேதமடைந்த கட்டடத்தில் தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணி மேற்கொண்டு வருவதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உக்ரைனின் மரியுபோல் நகரில் 2 கட்டடங்களிலிருந்து 100 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போர் இன்று 107ஆவது நாளாகவும் நீடித்து வருகிறது.

இந்தப் போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர பல நாடுகள் முயற்சித்த போதும் அவை தோல்வியில் முடிந்தன. இந்தப் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் ஆயுத உதவிகள் வழங்கி வருகின்றன. இதன் காரணமாக உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், போர் தொடங்கியதுமுதல் உக்ரைன் மீது 2,100 ஏவுகணைகளை ரஷ்யா ஏவியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. வைஸ்கார்ட் என்ற அமைப்பு சேகரித்த தகவல்களின் அடிப்படையில் உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களின் விவரம் வெளியாகியுள்ளது. அதில், 600 ஆயிரத்துக்கும் அதிகமான ஏவுகணைகள் பெலாரஸிலிருந்து உக்ரைன் மீது ஏவப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

உக்ரைனின் பல நகரங்களை ரஷ்யப் படையினரின் ஏவுகணைகள் குண்டு வீசி அழித்து வருகின்றன. இந்நிலையில், மரியுபோல் நகர மேயரின் உதவியாளர் பெட்ரோ ஆண்டிரியுசெங்கோ தெரிவிக்கையில், ரஷ்யா நடத்திய தாக்குதலில் 5 வானளாவிய கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன. அவற்றில் 2 கட்டடங்களில் நடந்த தேடுதல் பணியில் 50 முதல் 100 உடல்கள் வரை மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து தாக்குதலில் மரணங்கள் அதிகரித்து வருகின்றன - என்றார்.

இதேபோன்று, லுகான்ஸ்க் நகர ஆளுநர் தெரிவிக்கையில், சிவிரோடொனெட்ஸ்க் பகுதியை ரஷ்யப் படைகள் பெரியளவில் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளன என்றார்.

தொன்பாஸ் நகரின் விதியானது முடிவு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது என உக்ரைனிய ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்கு அல்-கொய்தா தற்கொலைத் தாக்குதல் மிரட்டல்

### முக்கிய நகரங்களில் பலத்த பாதுகாப்பு; விமான - ரயில் நிலையங்கள் வழிபாட்டுத் தலங்களில் அதிரடி சோதனை; பொதுக்கூட்டங்களுக்கு அனுமதி மறுப்பு



இந்தியாவில் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்போவதாக அல்-கொய்தா தீவிரவாதிகள் விடுத்துள்ள மிரட்டலையடுத்து, முக்கிய நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

பா.ஜ.கவைச் சேர்ந்த நுபுர் சர்மா மற்றும் நவீன் ஜிண்டால் ஆகியோர் நபிகள் நாயம் குறித்து வெளியிட்ட சர்ச்சை கருத்துகளையடுத்து அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். எனினும், நபிகள் நாயகம் குறித்த சர்ச்சைக்குரிய கருத்தால் இஸ்லாமிய நாடுகள் 15 இந்தியாவுக்கு எதிராக தங்களின் கண்டனத்தைத் தெரிவித்தன.

இந்தியாவில் சிறுபான்மையினர் மீது அச்சுறுத்தல் நீடிப்பதாக OIC என்ற சர்வதேச இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு வெளியிட்ட கண்டனத்தை இந்தியா மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு என்று நிராகரித்துள்ளது.

இந்நிலையில், டில்லி, மும்பை, உத்தரப்பிரதேசம், குஜராத் உள்ளிட்ட இடங்களில் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்போவதாக அல்-கொய்தா விடுத்த மிரட்டல் கடிதம் சமூக வலைத்தளங்களில் வெளியானது.

இந்த மிரட்டலின் தன்மையை ஆராய்ந்துவரும் அதேவேளை, முக்கிய நகரங்களுக்கும் வழிபாட்டுத்தலங்களுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ரயில் நிலையங்கள், மெட்ரோ, விமான நிலையங்கள், பொதுமக்கள் கூடும் இடங்களை பொலிஸார் மாறுவேடத்தில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எந்தவொரு சந்தேகத்திற்குரிய செயலையும் உடனுக்குடன் சரிபார்க்க உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுக் கூட்டங்கள் நடத்த அனுமதிக்க வேண்டாம் என்று மாநில அரசுகளுக்கும் பொலிஸாருக்கும் அறிவுறுத்தியிருப்பதாக உள்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஈரானில் கோர ரயில் விபத்து: 22 பேர் பலி; 90 பேர் படுகாயம்



ஈரானில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 22 பயணிகள் உரிழந்துள்ளதுடன், 90 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஈரானின் டாபாஸ் நகரிலிருந்து தெற்கு ஈரானின் யாஸ்த் நகர் நோக்கி 350 பயணிகளுடன் சென்ற பயணிகள் ரயிலொன்று தண்டவாளம் அருகேயிருந்த மணல் அள்ளும் இராட்சத இயந்திரம் மீது மோதியுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்து ரயில் பெட்டிகள் தடம்புரண்டன. பெட்டிகள் குலுங்கியதில் அதிலிருந்த பயணிகள் ஆங்காங்கே தூக்கி வீசப்பட்டனர்.

சம்பவ இடத்தில் ஹெலிகொப்டர் மூலம் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 22 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில் 90 பயணிகள் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## உலக செய்திகள்

# வேத மந்திரங்கள் முழங்க இந்து பாரம்பரிய முறைப்படி நடிகை நயன்தாராவை கரம்பற்றினார் விக்னேஷ் சிவன்

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் நடிகை நயன்தாரா - இயக்குநர் விக்னேஷ் சிவன் திருமணம் திரைப்பிரபலங்கள் முன்னிலையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

மாமல்லபுரத்தையடுத்த வடநெம்மேலி பகுதியிலுள்ள ஷெரட்டன் கிராண்ட் எனும் கடற்கரை நட்சத்திர விடுதியில் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு இடையே 20 சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்கள் முழங்க, இந்து பாரம்பரிய முறைப்படி காலை 10.30 மணியளவில் மணமகள் நயன்தாரா கழுத்தில் தாலி கட்டினார் மணமகன் விக்னேஷ் சிவன்.

இருவீட்டாரது நெருங்கிய உறவினர்கள், முக்கிய சில பிரபலங்கள் மட்டுமே பங்கேற்று மணமக்களை வாழ்த்தி ஆசிர்வதிக்க 6 ஆண்டுகள் காத்திருந்த காதல் ஜோடிகளான விக்னேஷ் சிவன் - நயன்தாரா ஜோடி நேற்று திருமண பந்தத்தில் இணைந்தது.

தமிழ்த் திரையுலகின் 'நம்பர் 1' நடிகையாக அசைக்க முடியாத இடத்தில் இருப்பவர் நயன்தாரா. விஜய் சேதுபதி கதாநாயகனாக நடித்த 'நானும் ரௌடிதான்' படத்தில் நடித்த போது அப்படத்தை இயக்கிய இயக்குநர் விக்னேஷ் சிவனுடன் காதலில் விழுந்தார். கடந்த ஆறு வருடங்களாக காதலித்து வந்த விக்னேஷ் சிவன் - நயன்தாரா ஜோடி அடிக்கடி சமூக வலைத்தளங்களில் தங்கள் ஜோடி புகைப்படங்களை பதிவிட்டு மற்றவர்களை பொறாமைப்பட வைத்தனர். எப்போது திருமண செய்வீர்கள் என பலரையும் கேட்க வைத்து நேற்று கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

**மூன்றுநாள் திருமண நிகழ்ச்சி**

முன்னதாக செவ்வாய்க்கிழமை திருமணத்திற்கான மெஹந்தி நிகழ்ச்சி நடைபெற்றது. நேற்றுமுன்தினம் வரவேற்பு நிகழ்ச்சியும், நேற்று திருமண நிகழ்வும் இடம்பெற்றன. நயன்தாராவின் 'மேக்'கப்பிற்காக மும்பையிலிருந்து மேக்கப் ஆர்ட்டிஸ்ட் வரவழைக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக, பொலிவுட் நடிகை தீபிகா படுகோன் உள்ளிட்டவர்களுக்கு மேக்கப் ஆர்ட்டிஸ்ட்டாக பணியாற்றியவர்கள் நயன்தாராவிற்கு மேக்-அப் போட்டனர்.


**நிறைய கட்டுப்பாடுகள்**

இந்த திருமணத்திற்கு வெளியாட்கள் எவரும் பங்கேற்க அழைப்பு இல்லை. முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்ட நபர்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மேலும் திருமணத்திற்கு வருபவர்கள் பாரம்பரிய உடையணிந்து வரும்படி மணமக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான நபர்கள் அப்படியே பங்கேற்றனர். திருமணம் நடைபெறும் கடற்கரை விடுதியை சுற்றி 'பவுன்சர்கள்' பாதுகாப்புப் பணியில் ஈடுப்பட்டுள்ளனர். திருமணத்திற்கு வருபவர்கள் மொபைல், கெமரா உள்ளிட்டவைகளை கொண்டுசெல்ல அனுமதி இல்லை. மேலும், திருமணத்திற்கு வரும் விருந்தினர்கள் அனைவரும் போனில் வரும் 'கியூஆர்' கோடை காண்பித்தே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். திருமணத்தை ஒளிப்பதிவு செய்யும் உரிமையை ஓடிடி தளமான நெட்ஃபிளிக்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.













**ரஜினி, ஷாருக், அஜித் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் பங்கேற்பு**

நயன்தாரா - விக்னேஷ் சிவன் திருமணத்தில் நடிகர் ரஜினிகாந்த், ஹிந்தி நடிகர் ஷாருக்கான், நடிகர் விஜய் சேதுபதி, நடிகர் அஜித் குடும்பத்தினர், இயக்குநர் அட்லீ, எஸ்.ஜே.சூர்யா, கார்த்தி, சரத்குமார் - ராதிகா, மணிரத்னம், கே.எஸ்.ரவிக்குமார், உதயநிதி, நெல்சன் திலீப்குமார், அனிருத், போனிகபூர், வசந்த் ரவி, திவ்யதர்ஷினி (டிடி) உள்ளிட்ட பல திரையுலகப் பிரபலங்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

**ஒரு இலட்சம் பேருக்கு விருந்து**

நயன் - விக்கி திருமணத்தை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஒரு இலட்சம் பேருக்கு மதியம் கல்யாண விருந்து வழங்கப்பட்டுள்ளது. ஆதரவற்றோர், முதியோர் இல்லங்கள், திருவண்ணாமலை உள்ளிட்ட முக்கிய கோயில்களில் இந்த கல்யாண விருந்தை வழங்க நட்சத்திர தம்பதிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த திருமண நிகழ்வு ஓடிடி ஒன்றில் வெளியாகவுள்ளது. இதற்காக பெரும்தொகை நயன் - விக்கி தம்பதியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**பலாப்பழ பிரியாணிமுதல் பூண்டு மிளகு ரசம்வரை...**

இந்நிலையில், திருமண நிகழ்வின்போது பரிமாறப்படும் உணவுகள்கொண்ட உணவுப் பட்டியல் வெளியிடப்பட்டிருந்தது. அதில், பலாப்பழ பிரியாணி, பொன்னி அரிசி சாதம், பருப்புக் கறி, அவியல், சேனைக்கிழங்கு வறுவல், வாழைக்காய் வறுவல், கெரட் மற்றும் பீன்ஸ் பொறியல், சாம்பார் சாதம், பனீர் பட்டாணி கறி, காளான் மிளகு வறுவல், தயிர் சாதம், பூண்டு மிளகு ரசம் உள்ளிட்ட உணவுகள் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

**ரூ. 20 கோடி பட்ஜெட்டில் ஆவணப்படம்**

நயந்தாரா - விக்னேஷ் சிவன் திருமண நிகழ்வுகளை பிரம்மாண்ட சினிமாவுக்கு நிகராக இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் குழுவினர் படமாக்கியுள்ளார்.

200 கோடி ரூபா பட்ஜெட்டில் படம் எடுத்தால் கூட 20 கோடி ரூபா செலவில் திருமணக் காட்சி படமாக்கப்படாது. ஆனால், நிஜத்தில் நயன்தாரா - விக்னேஷ் திருமண நிகழ்வுகளை 20 கோடி ரூபாவுக்கும் அதிகமான பட்ஜெட்டில் படமாக்கியுள்ளார் இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன்.

இந்த திருமண நிகழ்வில் சினிமா பாடல் காட்சியில் வருவதுபோல் 10இற்கும் மேற்பட்ட விலையுயர்ந்த ஆடை அணிகலன்களை தம்பதியர் மாற்றிக்கொண்டு நிகழ்வில் பங்கேற்பதாகவும், திருமண நிகழ்ச்சிக்கு வரும் அனைவரும் ஒரே மாதிரியான 'டிரெஸ் கோட்' குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், மணமக்கள் வருகை தொடங்கி அனைத்து நிகழ்வுகளையும் ஒரு சினிமா படத்தில் வரும் காட்சிபோல் லைட்டிங் மற்றும் செட்டிங் செய்து வர்ணமயமாக கௌதம் வாசுதேவ் மெனனின் குழுவினர் படமாக்கியுள்ளனர்.

இந்த திருமண நிகழ்வு தொடர்பான காட்சிகளை தொகுப்பாக்கி நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்துக்கு வழங்க சுமார் 25 கோடி ரூபா அளவில் ஒப்பந்தம் போட்டுள்ளது, நயன் மற்றும் விக்கியின் ரவுடி பிக்சர்ஸ். அதனால் தான் அங்கு வழங்கப்படும் தண்ணீர்ப் போத்தல்முதல் பன்னீர் பந்தல்வரை அனைத்திலும் ஜோடிக் கிளிகளின் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

திருமண நிகழ்வு காட்சிகள் தனியார் ஓடிடி தளத்திற்கு விற்கப்பட்டுவிட்டதால், எவருக்கும் உள்ளே செல்போன் எடுத்துச்செல்ல அனுமதி இல்லை என்றும் இதனை கண்காணிக்கவே 200 பவுன்சர்களும், திருமண விழாவுக்கு வரும் வி.வி.ஐ.பிக்களின் பாதுகாப்புக்கு என்று 2 கம்பெனி ஆயுதப்படை பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.


வார்த்தைக்கு வார்த்தை நயன்தாராவை என் தங்கமே... தங்கமே... என்று அழைக்கும் விக்னேஷ் சிவன் ஒருவழியாக தனது தங்கம் நயன்தாராவை கரம் பிடித்துவிட்டார். இவர்களது இல்லற வாழ்வு சிறக்க திரையுலகினரும், ரசிகர்களும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.











# T20 தொடர் ஆஸி.வசம்

## ஆறுதல் வெற்றிபெறுமா இலங்கை அணி?



சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் இரண்டாவது போட்டியிலும் ஆஸி. அணி வெற்றிபெற்ற நிலையில் ஒரு போட்டி எஞ்சியிருக்க, ஆஸி. அணி இருபதுக்கு 20 தொடரைக் கைப்பற்றியது.

முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்ற நிலையில், இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது. ஆஸி. அணியின் வேகப்பந்துவீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் உபாதைக்குள்ளானதால் அவருக்கு மாற்று வீரராக ஜெய் ரிச்சர்ட்சன் களமிறங்கினார். இலங்கை அணி மாற்றமின்றி களமிறங்கியது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸி. அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 124 ஓட்டங்களை பெற்றது. சரித் அசலங்க 39 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 36 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

125 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு ஆடிய ஆஸி. அணி 17.5 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை அடைந்தது. இதன்மூலம் ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில், ஆஸி. அணி இருபதுக்கு 20 தொடரைக் கைப்பற்றியது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும், இறுதியுமான போட்டி நாளை இரவு 7.00 மணிக்கு கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்தப் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்று தொடரில் ஆறுதல் வெற்றிபெறுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.



# யு.எஸ். ஒலிம்பிக் ஹோல் ஆஃப் ஃபேமில் மைக்கேல் பெல்ப்ஸ்

(ரமணி)

ஒலிம்பியன் வீரரான மைக்கேல் பெல்ப்ஸ், பராலிம்பிக் சம்பியன் டிரிஷா சோர்ன்-ஹட்சனாகிய இருவரும் ஒலிம்பியன் மற்றும் பாராலிம்பியன் ஆகியோர் முறையே யு.எஸ். ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் ஹோல் ஆஃப் ஃபேமில் சேர்க்கப்படவுள்ளனர்.

2022ஆம் ஆண்டின் வகுப்பின் ஒரு பகுதியாக அமெரிக்க ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் கமிட்டி பெயரிடப்பட்ட ஹோல் ஆஃப் ஃபேமில் நுழைந்த 14 பேரில் இரண்டு நீச்சல் வீரர்களும் அடங்குவர். பெல்ப்ஸ் 15 வயதில் சிட்னி 2000இல் தொடங்கி ஐந்து ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று மொத்தம் 28 பதக்கங்களை வென்றார். அவர் ரியோ 2016 வரை 23 தங்கங்களைச் சேகரித்தார், பீஜிங்கில் 2008 ஒலிம்பிக் சாதனையுடன் எட்டு தங்கங்களை பெற்றார்.

சோர்ன்-ஹட்சன் பாராலிம்பிக்ஸில் 41 தங்கங்கள் உட்பட 55 நீச்சல் பதக்கங்களை வென்றார். அவர் ஆர்ன்ஹெம் 1980 முதல் ஏதென்ஸ் 2004 வரையிலான விளையாட்டுகளின் ஏழு பதிப்புகளில் போட்டியிட்டார், மேலும் 1996 அட்லாண்டாவில் விளையாட்டு வீரர்களுக்கான பாராலிம்பிக் உறுதிமொழியை எடுத்தார். மேலும் ஆறு வீரர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

அவர்களில் மற்றொரு நீச்சல் வீராங்கனை 12 முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற நடாலி காஃப்லின், மூன்று முறை ஆல்பைன் பனிச்சறுக்கு ஒலிம்பிக் பதக்கம் வென்ற லிண்ட்சே வோன், ஐந்து முறை பெண்கள் ஒற்றையர் ஃபிகர் ஸ்கேட்டிங் உலக சம்பியனான மிச்செல் குவான் மற்றும் உதைபந்து வீரர் மியா ஹாம் ஆகியோர் அடங்குவர்.

சைக்கிள் ஓட்டுபவர், ஆல்பைன் பனிச்சறுக்கு வீரர் மஃபி டேவிஸ் மற்றும் சக்கர நாற்காலி கூடைப்பந்து வீரர் டேவிட் கிலே, கோடை மற்றும் குளிர்கால பராலிம்பிக்ஸில் பல பதக்கம் வென்றவர்களும் ஹோல் ஆஃப் ஃபேமுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். மாண்ட்ரீல் 1976 ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 4X100 மீற்றர் ஃப்ரீஸ்டைல் நீச்சல் தொடர் ஓட்டத்திலும், சால்ட் லேக் சிட்டி 2002 பாராலிம்பிக்ஸில் பாரா ஐஸ் ஹொக்கியிலும் தங்கப் பதக்கம் வென்ற அணிகள் பரிந்துரைக்கப்பட்டன. இரண்டு ஜாம்பவான்கள், ஒரு பயிற்சியாளர் மற்றும் ஒரு சிறப்பு பங்களிப்பாளருடன் இணைந்துள்ளனர்.

அமெரிக்காவின் முதல் பனிச்சறுக்கு ஒலிம்பிக்கில் செயின்ட் மோரிட்ஸ் 1948ல் தங்கப் பதக்கம் வென்றவர். கிரெட்சென் ஃப்ரேசர் மற்றும் 110 மீற்றர் தடை ஓட்டத்தில் ஆடவர்களுக்கான ஒலிம்பிக் சம்பியன் ரோஜர் கிங்டம், பெண்கள் கூடைப்பந்து பயிற்சியாளர் பாட் சம்மிட் மற்றும் டென்னிஸ் நட்சத்திரம் பில்லி ஜீன் கிங் ஆகியோர் ஜாம்பவான்களாக இணைக்கப்படவுள்ளனர். முறையே பெண்கள் ஒற்றையர் கிராண்ட்ஸ்லாம் வென்றவர், முறையே பயிற்சியாளர் மற்றும் சிறப்பு பங்களிப்பாளராக சேர்க்கப்பட்டார். அந்தந்த பிரிவுகளில் ஹோல் ஆஃப் ஃபேமில் நுழையும் முதல் பெண்கள் இவர்களே.

கொலராடோ ஸ்பிரிங்ஸிலுள்ள அமெரிக்க ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் அருங்காட்சியகத்தில் ஜூன் 24 அன்று ஒரு அறிமுக விழா திட்டமிடப் பட்டுள்ளது. ஹோல் ஆஃப் ஃபேம் 1979இல் நிறுவப்பட்டது. முதல் வகுப்பு 1983இல் சேர்க்கப்பட்டது, மேலும் இந்த ஆண்டு உள்ளீடுகள் அதன் உறுப்பினர் எண்ணிக்கையை 168 ஆகக் கொண்டுள்ளது.



# இரத்துசெய்யப்பட்ட அமெரிக்க ஓபன் பேட்மிண்டன்

ஒருசில நாடுகளில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் மீண்டுமொரு முறை இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் அமெரிக்காவில் நடக்கவிருந்த இந்த பேட்மிண்டன் போட்டிகள் கொரோனா அச்சம் காரணமாக இரத்துசெய்யப் பட்டுள்ளன. ஏற்கனவே கொரோனா பரவல் காரணமாக கடந்த 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகள் தொடர் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# உஸ்பெகிஸ்தானிடம் படுதோல்வியடைந்த இலங்கை



ஆசிய உதைபந்து சம்மேளனத்தின் ஆசிய கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் மூன்றாம் சுற்றின் தமது முதல் போட்டியில் இலங்கை அணி உஸ்பெகிஸ்தான் அணியிடம் 3-0 என்ற கோல்கள் கணக்கில் படுதோல்வியடைந்தது.

'சி' குழுவில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி, தமது முதல் போட்டியில் நேற்று முன்தினம் வரவேற்பு நாடான உஸ்பெகிஸ்தானுடன் மர்கஸிய் அரங்கில் மோதியது. போட்டியின் 36ஆவது நிமிடத்தில் உஸ்பெகிஸ்தான் அணி முதல் கோலை அடித்தது. பின்னர் 47 மற்றும் 60ஆவது நிமிடங்களில் உஸ்பெகிஸ்தான் அணி கோலடிக்க இறுதியில் 3-0 என்ற கணக்கில் இலங்கை அணி தோல்வியை சந்தித்தது.

முதல் போட்டியில் தோல்வியுற்ற இலங்கை அணி எதிர்வரும் 11ஆம் திகதி தாய்லாந்தையும், 14ஆம் திகதி மாலைதீவுகளையும் எதிர்த்தாடுகிறது.


# மைலோ வெற்றிக் கிண்ண வலைப்பந்து சுற்றுப்போட்டி

மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான பாடசாலை மைலோ வெற்றிக் கிண்ண வலைப்பந்து சுற்றுப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பத்தரமுல்லை புத்ததாச அரங்கில் இடம்பெறவுள்ளது. 2019ஆம் ஆண்டில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்து போட்டியில் முதல் 16 இடங்களைப் பெற்ற பாடசாலைகள் மோதுகின்றன.

கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வுக்கு, நாட்டில் அடிமட்ட விளையாட்டுகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தின் ஒரு பகுதியாக நெஸ்லே மைலோ அனுசரணை வழங்குகிறது. சுற்றுப்போட்டியின் முதற்சுற்று லீக் அடிப்படையில் நடைபெறும், அதைத் தொடர்ந்து நொக்-அவுட் சுற்று நடைபெறும். இறுதிப்போட்டி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக கல்விப் பணிப்பாளர் (விளையாட்டு மற்றும் உடற்கல்வி) ஏ.டி.எம்.டி.பண்டார, உதவிக் கல்விப் பணிப்பாளர் (விளையாட்டு மற்றும் கல்வி) திருமதி வி. உபாலி அமரதுங்க மற்றும் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், விசேட விருந்தினராக இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவியான திருமதி. விக்டோரியா லக்ஷ்மியும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

Nestlé MILO



# பாபரின் சதம், குஷ்தில் ஷாவின் அதிரடியுடன் பாகிஸ்தானுக்கு வெற்றி

சுற்றுலா மேற்கிந்திய தீவுகள் அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் பாகிஸ்தான் அணி, குஷ்தில் ஷாவின் அதிரடியுடன் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மேற்கிந்திய தீவுகள் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. அதில் முதலாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் முல்தானில் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 305 ஓட்டங்களை குவித்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷாய் ஹோப் சிறப்பாக ஆடி சதமடித்து 127 ஓட்டங்களை குவித்தார். அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ஷமார் புருக் 70 ஓட்டங்களை குவித்தார். ஹரிஸ் ரவுப் 4 விக்கெட், ஷஹீன் அப்ரிடி 2 விக்கெட் வீழ்த்தினர்.

306 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியில், அணித்தலைவர் பாபர் அஸாம் பொறுப்புடன் ஆடி சதமடித்து 103 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கடைசி கட்டத்தில் குஷ்தில் ஷா அதிரடியாக ஆடி அணியை வெற்றிபெற வைத்தார். பாகிஸ்தான் 1-0 என முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது போட்டி இன்று இலங்கை நேரப்படி மாலை 4.30 மணிக்கு முல்தானில் ஆரம்பமாகிறது.

# மர்ஹூம் என்.டி.பாரூக் ஞாபகார்த்த கிண்ணம்; சம்பியனானது ஏறாவூர் லக்கி ஸ்டார்

காத்தான்குடி உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மர்ஹூம் என்.டி.பாரூக் ஞாபகார்த்த கிண்ண உதைபந்தாட்ட தொடரில் ஏறாவூர் லக்கி ஸ்டார் கழகம் சம்பியனாக தெரிவானது.

காத்தான்குடி உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவர் எம்.எம்.எம்.ஜலீல் தலைமையில் காத்தான்குடி விக்டெரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் பிரதம அதிதியாக இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் கலந்து சிறப்பித்தார்.

சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டியில் ஏறாவூர் லக்கி ஸ்டார் - அக்கரைப்பற்று ஹிஜ்றா அணிகள் மோதின. இதில் ஏறாவூர் லக்கி ஸ்டார் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மர்ஹூம் என்.டி.பாரூக் ஞாபகார்த்த கிண்ண உதைபந்தாட்ட சம்பியனாக தெரிவானது.

இறுதிப்போட்டியில் காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர் மற்றும் 1992 காத்தான்குடி மத்திய கல்லூரியின் உயர்தரப் பிரிவு மாணவர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், காத்தான்குடி உதைபந்தாட்ட சங்கத்தின் உறுப்பினர்கள் உட்பட கிழக்கு மாகாணத்திலுள்ள உதைபந்தாட்ட லீக்களின் தலைவர்கள், செயலாளர்கள், உதைபந்தாட்ட நடுவர் சங்க உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.







Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7